70

# ஜகன்மோகினி

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மாள்



## "சந்தோஷ மலர்"

(தொடர்ச்சி)

### மற்ற விசேஷ அம்சங்கள்


| | | |
|---|---|---|
| ரேடியோ டயரி | — | "நித்தியானந்தர்" |
| உலகில் உண்டா? | — | "அநுபவம்" |
| வனிதா மண்டலம் | — | வை. மு. கோ. |
| பாட்டியின் பரிபாஷை | — | "பேத்தி" |
| விகட வேடிகள் | — | "விருச்சிகம்" |
| வாணியின் பிரஸாதம் | — | சங்கராபரண கீர்த்தனை. |


ஆகஸ்டு 1940

சந்தோஷ மலர்
[தொடர்ச்சி]

அணா 2

# க்ஷேமலாபங்கள்

அன்பர்களே!

சந்தோஷ மலருடன் மோகினி உங்களை தரிசித்துச் சந்தோஷமுறச் செய்திருப்பாள் என்று நம்பி உங்களுடைய உதவியும் அன்பும் ஓங்கி வளர வேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

"உங்கள் மோகினியில் பிரசுரமாகியுள்ள பாட்டுக்களை நாங்கள் தாராளமாகப் பாடலாமா! ரேடியோவில் பாடலாமா, அதற்குத் தடையொன்றுமில்லையே?" என்று சில சங்கீத அபிமானிகள் கடிதமெழுதியிருப்பதை நான் மனப்பூர்வமான சந்தோஷத்துடன் வரவேற்றுப் பதில் அளிக்கின்றேன்.

அந்தப் பாட்டுக்களைப் பாட எவ்விதமான தடையுமில்லை. தாராளமாகப் பாடலாம். திருச்சினாப்பள்ளி ரேடியோ நிலையத்துக்காரர் அப் பாடல்களைப் பாடுவதற்கான அனுமதி பெற்றிருக்கிறார்கள் என்ப சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். பாடல்களில் சிலவ நாகஸ்வர வித்வான் ஸ்ரீ ஏ. பார்த்தஸாரதியவர்கள்கூட திருச்சி நிலயத்தில் வாசித்திருக்கிறார்; இம்மாதம் 26-ந் தேதியும் வாசிப்பார்.

நிற்க, "ஜகன்மோகினி" ஓர் பெண்மணியால் நடத்தப்படுவதும், முக்யமாக பெண்களுக்கு மிகவும் உபயோகமானதாக விளங்குவதுமா பத்திரிகையாகையால் இதில் நல்ல உயர்தரமான புதிய பக்ஷணங்க சமையல் வகைகள் முதலியவற்றிற்காக ஒரு பகுதி ஏன் ஏற்படுத்தக்கூடாது!" என்று சில சகோதரிகள் எழுதியிருக்கிறார்கள்.

இது நல்ல யோசனைதான். இதை நானும் பாராட்டுகிறேன். ஆனால், பழய புளியோதரை, பகோடா, உருளைக்கிழங்கு கரி, எண்ணெய் கத்தரிக்காய், தவலை அடை, சீடை, முறுக்கு, மனவுகப்பு, உப்புமா...முதலிய பக்ஷணங்களுக்கு புதியதாக ஓர் நாமகரணத்தைச் சூட்டி எத்தனையோ சகோதரிகள் எழுதியும், பேசியும் வருவதை நாம் பார்க்கிறோம். அம்மாதிரி முறையிலேயே உருளைக்கிழங்கு வடை செய்யும் பாகத்தையும் எழுதி, அதற்கு "ஆலூகேக்" என்று ஹிந்தியும், இங்கிலீஷும் கலந்து மணிப்ரவாள திருநாமமிட்டு ஒரு சகோதரி அனுப்பியிருக்கிறார்...அவர் அன்பாய் அனுபியதற்கு நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால், பழய பக்ஷணத் புதிய பெயரால் பிரசுரித்து ஜனங்களை ஏமாற்றமுறச் செய்வது சரிய என்று எனக்குத் தோன்றுவதால் நான் அதைப் பிரசுரிக்கவில்லை. அ அனுப்பிய சகோதரி வருத்தப்படாமல் வேறு புதிய பக்ஷணம் ஏதா ஒன்று எழுதி அனுப்பினால் 'பக்ஷணப் பகுதி' என்ற தலையங்கத்தில் க டாயம் பிரசுரிக்கிறேன். மறுபடியும் சொல்கிறேன். பழய பண் களுக்கு புதிய பெயர்மட்டும் வேண்டாம். நன்றாக யோசனை புதிதாக ஒன்று கண்டுபிடித்து முதலில் தாமே அதைச் செய்து பரீக்ஷித்து பார்த்துப் பிறகு தமக்குத் திருப்தியானால் எழுதியனுப்பவும். தோன்றியதை எழுதுவதில் லாபமில்லை. இதை முக்கியமாகக் கவனிக்கவும்.

வை. மு. கோ.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

| மலர் 17 | விக்ரம ௵ ஆடி ௴<br>ஆகஸ்டு 1940 | இதழ் 8 |
|---|---|---|

இராகம் : சங்கராபரணம் ஆதி - தாளம்.

பல்லவி

கருணுநிதே கமலலோசனு! கருணிம்சவைய்யிா
கரிராஜபோஷ! (க)

அனுபல்லவி

தருணீனிமொரவினி தயதோனு
வரமிச்சி காசின பரம தயாளா (க)

சரணம்

மந்தகாஸவதனு வாரிஜசரணு!
அந்தமைன அரவிந்தமுகலோலா
சிந்ததீர்ச்ச ராதா ஸ்ரீகோதாநாதா
பந்தமேலரார, சுந்தராங்க தீரா. (க)

இக் கீர்த்தனை "சாமளநாதன்" 142 ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது ஸ்வரத்திற்கு உள்ளே 15-வது பக்கம் பார்க்கவும்.

## 26-8-40-ந் தேதி திருச்சி ரேடியோவில்

### சென்னை ஸ்ரீ ஏ. பார்த்தசாரதி

காலை 8-20 முதல் 8-50 வரை
மாலை 6-05 ,, 6-30 ,,
இரவு 9-50 ,, 10-30 ,,

நாகஸ்வரம் வாசிப்பார்.

## கேட்டு ஆனந்தமடையுங்கள்

# நித்தியானந்தரின் ரேடியோ டயரி



[V. M. SRINIVASAN, M.A., B.L.]

நித்தியானந்தர் :—சர்மாஜி! வரணும், இந்த தரம் நிறைய சமாச்சாரங்களிருக்கின்றன. பல விசேஷ மாறுதல்கள்!

லாவண்ய சர்மா :—விமோசன மேற்பட்டுவிட்டதா! இனி குறைகளுக்கு இடமே இல்லை என்கிறீரா?

நி:—விஷய மென்னவென்று கேட்காமலே ஏதேதோ அடுக்கிக்கொண்டே போகிறீரே. திடீரென்று ஒரே நாளில் பூர்ண சீர்திருத்தம் ஏற்பட்டுவிடுமா?

லா :—நீர் ஆரம்பித்ததை சொல்லிமுடியும்.

அஞ்சல்

நி:—போட்டி குறைந்து ஒருவாறு ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லவேண்டும்: ஒரே சமயத்தில் இரு நிலையங்களிலும் சிறந்த கச்சேரிகளை அமைத்து நம்மை பிரமிக்கச் செய்வதைவிட்டு இப்போது ஒரு நிலையத்தின் சிறந்த கச்சேரியை மற்றொன்றில் அஞ்சல்செய்கிறார்கள். முக்கியமாக திருச்சிநிலைய கச்சேரிகளை சென்னையில் அஞ்சல்செய்வது மிகவும் திருப்தியளிக்கின்றது.

நல்ல மாறுதல்

லா:—பேஷ்! இதை முதலிலிருந்தே செய்திருந்தால் நன்றாயிருக்குமே. மற்றபடி வேறு என்ன விசேஷம்?

நி:—அ. இ. ரே. வின் நிகழ்ச்சிக் குறிப்பு வெளியீடு இப்போது திருச்சியிலிருந்து வெளிவருகிறது. முன்னைவிட அதிக உபயோகமாயும், கவர்ச்சியாயுமுள்ள முறையில் வெளியிடுகிறார்கள்.

லா:—நாளுக்கு நாள் அபிவிருத்தியாவதுதானே நல்லது. அப்புறம் வேறேதாவது உண்டா?

ஆங்கில நிகழ்ச்சிகள்

நி:—சென்னையில் ஆங்கில நிகழ்ச்சிகள் நன்றாக உள்ளனவென்று முன்னமே சொல்லியிருக்கிறேனல்லவா? ஹரீந்த்ரநாத் சட்டோபாத்தியா நடத்தும் எந்த நிகழ்ச்சியும் மிகச் சிறந்ததாகவிருக்கிறது. நல்ல உச்சரிப்பு, பாவம், இயற்கை யாவும் ஒருங்கே சேர்ந்து முதல்தரமாக அமைகின்றன. மற்றபடி பொதுவான விஷயங்களைப்பற்றி அல்லது கலைகளைப்பற்றி ஒலிபரப்பப்படும் பேச்சுக்கள் ரஸிக்கத்தக்கனவாயிருக்கின்றன. உதாரணமாக நாட்டுப் பாட்டுக்களைப்பற்றிய சொற்பொழிவைக் குறிப்பிடலாம். பிரஸித்தி பெற்ற குற்றவாளிகளின் சாதுர்யங்களை சட்ட நிபுணர்களைக் கொண்டு ஒலிபரப்பச் செய்கிறார்கள்.

183044

ரேடியோ டயரி—ஜூலை புராணம்

லா:—இப்போது தினசரி குறிப்புகள் எழுதுவதில்லையா? நான் உமது டயரியைப் பார்த்து வெகு நாளாயிற்றே. எங்கே, எடும் பார்க்கலாம்.

நி:—தாராளமாய் பாரும். பொறுமையுடன் படியும், நான் கேட்ட நிகழ்ச்சிகளுள் குறிப்பிடத்தக்கவைகளைப்பற்றி மாத்திரம் தான் குறிப்புகள் எழுதியிருக்கிறேன். (சர்மா படிக்கலானார்.)

ஜூலை 1940 (ம=மதராஸ். தி=திருச்சி.)

1. மன்னார்குடி ராஜகோபாலபிள்ளை, (தி) மைசூர் வாஸுதேவாச்சார் (ம) முதலியவர்களின் பாட்டு எதிர்பார்த்தபடி அமையவில்லை. சந்திராவின் பாட்டு (ம) அபிவிருத்தியடைந்திருக்கிறது. குன்னக்குடி வெங்கடராமய்யரின் புல்லாங்குழல் (ம) கூடிய வரை நன்றாயிருந்தது.

2. டி. கே. பட்டம்மாள் (ம), பாலையூர் வெங்கட்ராமய்யர் (ம) இருவரின் பாட்டும் மிகவும் திருப்திகரமாயிருந்தன. திட்டை கிருஷ்ணையங்காரின் பாட்டும் (தி) கூடியவரை நன்றாக விருந்தது. மதராஸ் மாணிக்கம் நகரத்தில் தன் அனுபவங்களைத் தன் கிராமவாசிகளுக்கு விஸ்தரித்தது(தி)முழுதும் ரஸிக்கத்தக்கதாயிருந்தது. வ.ஒன்!

3. திருவெண்காடு சுப்ரமணியப்பிள்ளையின் கச்சேரி (ம) பிரமமானந்தமாயிருந்தது. லதாங்கி ராகமும், ராகமாலிகையும் முக்கியமாகக் குறிப்பிடலாம். நாகஸ்வாமி பாகவதரின் கச்சேரி (தி) கூடிய வரை நன்றாயிருந்தது.

4. 'காலமும் காதலும்' என்பதைப்பற்றிய சங்கீத உபந்நியாஸம், கோஷ்டி வாத்திய சங்கீதம், பாலகணேசய்யரின் புல்லாங்குழல் முதலியவைதான் இன்றைய (திருச்சி) முக்கிய நிகழ்ச்சிகள். மாதர்களுக்கான நிகழ்ச்சியில் (ம) பாட்டி, பெரியம்மா முதலிய பாகங்களைச் சிறுவர்கள் ஏற்றுக்கொண்டதையும், ஒரு அம்மாள் படிப்பதற்குத் தடமாடியதையும் கண்டதும், சிரிப்பதா அல்லது இப்படியும் இருக்கிறதே என்று பரிதாபப்படுவதா? என்று புரியாததால் ரேடியோவை நிறுத்தும்படியாயிற்று.

5. வர்மாவின் புல்லாங்குழலும், செம்பனார்கோயில் சகோதரர்கள் நாகஸ்வரமும் தவிர வேறு விசேஷ நிகழ்ச்சிகளில்லை.

6. இன்றைய சிறந்த கச்சேரி (ம) பாலக்காடு ராமா பாகவதருதான். அடுத்தபடியாக செல்வப்பிள்ளை அய்யங்கார் பாட்டும், (தி) ஸ்ரீனிவாஸபிள்ளை புல்லாங்குழலும், (தி) சிவவடிவேல் பிடிலும் (ம) குறிப்பிடத்தக்கவை "சிரிப்பும், தேகாரோக்கியமும்" (தி) என்ற விவாதம் ரஸமாயிருந்தது.

7. அபிராமசுந்தரியின் பிடில் (ம) எதிர்பார்த்தபடி இல்லை.

8. பொம்மைக்குடித்தனம் (தி) என்ற நாடகத்தில் சம்பாஷணைகளும், நடிப்பும் நன்றாயிருந்தன. ஆனால் கதைப்போக்கின் மனப்

பான்மை நமது சமூகக் கொள்கைகளுக்கோ, கட்டுப்பாட்டிற்கோ, அல்லது முன்னேற்றத்திற்கோ ஏற்றதா வென்பதுதான் சந்தேகம். பத்மாக்ஷியின் (ம) பாட்டு இன்னும் சோபிக்க நல்ல அப்பியாசமும், சுத்தமாகப் பாடும் பழக்கமும் வேண்டும். விருத்திக்கு வரக்கூடிய சிறு பாடகிகளில் இவரும் ஒருவராவார்.

9. இரு நிலையங்களிலும் பிடில் கச்சேரிகள் நன்றாயிருந்தன.

10. சௌடய்யா பிடிலும் (தி) முக்கியமாக அவர் வாசித்த வராளி ராகமும், தோதாத்திரி அய்யங்காரின்பாட்டும் (தி) நன்றாய் அமைந்தன.

11. பல்லடம் சஞ்சீவி ராவ், (தி) வழக்கம்போல நன்கு வாசித்தார். கீரவாணி ராகத்தை மிக இனிமையாக வாசித்தார். அன்றிரவு சென்னையில் நடந்த பிரஸங்கத்தின் ஒலிப்பதிவை திருச்சியில் சுமார் 9-45 மணிக்கு ஒலிபரப்பினார்கள். அந்தப் பேச்சின் பின்னணியில் ஸ்ரீ ஸஞ்சீவிராவின் புல்லாங்குழல் சங்கீதம் (அன்று 8-30 முதல் 8-45 வரை நடந்ததேதான்) ஒலிப்பதிவாயிருந்தது ஆச்சரியமாயிருந்தது. அடுத்ததாக எம். டி. பார்த்தசாரதியின் (தி) மணிப்பிரவாளக்கச்சேரியைக் குறிப்பிடலாம். இனிமையான கதம்பக்கச்சேரி. "ஸ்வர்க்கத்தில் சம்பாஷணை" என்ற தலைப்பில் நடந்த நாடகத்தில் (ம) தன்மயக்கம்தான் அடிக்கடி காணப்பட்டது.

12. அங்கப்பப் பிள்ளை (தி) தனக்குப் பிரியமான பவப்ரியா, கோகிலப்ரியா முதலிய ராகங்களை விஸ்தாரமாக ஆலாபனை செய்தார்.

13. பி. எஸ். ராஜா அய்யங்காரின் கச்சேரி (ம) மிகச்சிறந்து விளங்கிற்று. ஸ்ரீ ஜயலக்ஷ்மியின் பிடிலில் (ம) பாப்பாவின் பாணி புலப்பட்டது. நல்ல அழுத்தமான கை, கம்பீரமாயிருந்தது.

14. திருச்சிநிலைய வாத்தியகோஷ்டியின் கச்சேரி நன்றாயிருந்தது.

15. முசிரியின் கச்சேரி (தி) சென்னையில் அஞ்சல் செய்யப்பட்டது. வழக்கம்போல நன்றாயிருந்தது. எம். எஸ். ஸரோஜனி (ம) கூடியவரை திருப்தியாகப் பாடினார்.

16. வஸந்தகோகிலம் (ம), ராஜாயி (தி) இருவரின் பாட்டும் நன்றாயிருந்தது. சின்னையனின் கலியாணம் என்ற சிறு நாடகம் (தி) புதிய அழகுடன் நடிக்கப்பட்ட பழைய கதை.

17. விசேஷமாக ஒன்றுமில்லை.

18. "பால் பொங்கல்" (தி) என்ற சிறு நாடகம் மிகவும் ரஸமாகவிருந்தது. சின்னபீருஸாஹேபின் நாகஸ்வரம் (ம) சென்ற முறையைவிட நன்றாயிருந்தது.

19. திருவாரூர் சகோதரர்களின் நாகஸ்வரம் (தி) கூடியவரை நன்றாகவிருந்தது.

20. சூடாமணியின் பாட்டு (தி) எப்போதும்போல நன்றாயிருந்தது. "சமாதி" என்ற நாடகம் (தி) நன்கு நடிக்கப்பட்டதெனினும் எதிர்பார்த்தபடி திருப்தியளிக்கவில்லை.

21. மன்ரோவின் கொள்கையைப்பற்றி சுருக்கமாகவும், தெளிவாகவும் ஸ்ரீ ஜி. ரங்கஸ்வாமி அய்யங்கார் (தி). சொற்பொழிவாற்றினார். நீலகண்டய்யர் (தி) பாட்டு கூடியவரை நன்றாயிருந்தது.

22. மாலை 6-30-க்கு திருச்சியில் 'உதயம்' மங்களகரமாக சங்கீதத்தினிடையே ஆயிற்று. ஆரம்பம் முதல் கடைசிவரை மிகவும் ரஸிக்கத்தக்கதாயிருந்த நிகழ்ச்சி. தியாகராஜ பாகவதரின் பாட்டு (தி-ம) சென்ற தரத்தைவிட திருப்திகரமாயிருந்தது. வையாபுரி பிள்ளையின் நாகஸ்வரம் (தி) கூடியவரை நன்றாயிருந்தது.

23. கே. பி. சுந்தராம்பாள் (ம), தர்மாம்பாள் (ம), மணி பாகவதர் (தி). எம். டி. பார்த்தசாரதி (தி) முதலியவர்களின் கச்சேரி எப்போதும்போல நன்றாயிருந்தன.

24. ராஜமாணிக்கம் பிள்ளையின் பிடில் கச்சேரி (தி) விசேஷமாயிருந்தது. ஏ. ஜி. சுப்ரமணியம் திருப்திகரமாகப் பாடினார்.

25. செம்பையின் கச்சேரி முதல்தரமாயிருந்தது. ஆனால் சென்னையில் ரிலே செய்யவில்லை.

26. வீருஸ்வாமி பிள்ளையின் கச்சேரி 'ஏ. ஒன்'. காம்போதி இன்னும் காதிலேயே ரீங்காரம் செய்கிறது. ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி, கணேசய்யர் இருவரும் நன்கு பாடினார்கள்.

---

# உலகில் உண்டா?

(1) கவலையில்லாத மனமும் களங்கமில்லாத மதியும் (சந்திரனும்) இருக்கமுடியுமா?

(2) கதவில்லாத வீடும் கைவீசி நடக்காத மனிதர்களுமுண்டா?

(3) பாவம் செய்யாத மனிதர்களும் கோபம் கொள்ளாத மாமியார்களும் உலகில் உண்டா?

(4) கேலி செய்யாத சிறுவர்களும் பாலில் ஜலம் விடாத இடையர்களும் உலகில் உண்டா?

(5) பொய் சொல்லாத நாக்கும் தன்னைப்பற்றி பெருமை பேசாத மனிதரும் உலகில் உண்டா?

(6) கபட மில்லா நெஞ்சும் சபலமில்லாச் சித்தமும் உலகில் உண்டா?

(7) மனைவியை மிரட்டாத புருஷனும் மனைவிக்கு நடுங்காத புருஷனும் உண்டா?

(8) தாய் வீட்டில் பற்றில்லா மருமகளும் தமையனிடம் சண்டை செய்யாத தங்கச்சியும் உலகிலுண்டா?

(9) குறை கூறாத சம்மந்தியும் குறும்பு பேசாத நாத்தனாரும் உலகில் உண்டா?

(10) கல்யாண வீட்டில் அஜீர்ண ஏப்பமும் கருமாதி வீட்டில் பசி ஏப்பமும் இல்லாதிருக்க முடியுமா? —வை. மு. கோ.

# வனிதா மண்டலம்

வை. மு. கோ.

மங்களம் :—கல்யாணீ! கல்யாண கோர்டு சாத்தியாயிற்று. இனிமேல் ஊர் பிரயாணங்களும், வெள்ளிக்கடை வியாபாரமும், ஸில்குக்கடை பேரமும் குறையுமல்லவா!

கல் :—வாஸ்தவம், இன்னும் ஆறு மாதத்திற்கு விசாரமில்லை. அடுத்த வருஷம் நம்ம வீட்டு கல்யாணம் நடக்கவேண்டும். நினைத்தாலே பயமாயிருக்கிறது.

மங் :—பயமென்ன கல்யாணீ! முன்காலத்தைப்போல் இந்த காலத்தில் ஏதாவது சிரமம் உண்டா! காசை வீசி எறிந்தால் ஐந்து நிமிஷத்தில் சாமான்கள் வீடு நிறைந்துவிடாதா! பாத்திரமோ பண்டமோ செய்வதற்கு மாதக் கணக்கு வேண்டுமா!

கல் :—அதற்கெல்லாம் சொல்லவில்லை மங்களம்! சரியான சம்மந்தம் கிடைக்கவேண்டும். அதுதான் இரவு பகல் கவலையாயிருக்கு. எங்க அத்தை வீட்டில் பார்த்தபிறகு பயம் அதிகமாய்விட்டது.

மங் :—ஏன்! அத்தை வீட்டில் என்ன நடந்தது? ஒரு வேளை பிள்ளையைப் பெத்த புண்ணியவதிகள் பிள்ளைகளை விற்பதற்கொப்ப பேரம் பேசி 500, 400, 350, 200 என்று ஏலம் போடுவதுபோலும் விலை கூறுவதுபோலும் பேரம் பேசுகிறார்களே அந்த விஷயத்திற்காகப் பயமா! இந்த விஷயத்தைக் கேட்கும்போதே எனக்கு எரிச்சல் வருகிறது. கல்யாணீ! தம் குழந்தைகளுக்குக் கல்யாணத்தைச் செய்து களிப்பதற்கு பிறர் கைப்பொருளை எதிர்பார்ப்பது எவ்வளவு இளைப்பமாக இருக்கிறது? அதிலும் இக்காலத்தில் வரவர தொத்துநோய் பரவுவதுபோல் ஒரு சம்பிரதாயம் பரவிவிட்டது. கல்யாணத்திற்கு அதி முக்கியமானதும், மங்களகரமானதுமான திருமங்கல்யம், கூறை முதலிய சேலைகள், இவைகளைக்கூட பெண் வீட்டாரே வாங்கிக் கொள்ளவேண்டுமாம். கூலிக்காரன்போல் பிள்ளை அந்த தாலியைக் கட்டவேண்டுமாம். இந்தமாதிரி சொல்வதற்கு வெட்கமாயில்லையா என்று தோன்றுகிறது. பிறரிடம் யாசகம் கேட்பதற்கா பிள்ளைகளைப் பெறுவது? பெண்வீட்டாரும் தம் கடமைப்படி செய்து, பிள்ளை வீட்டாரும் தம் சக்திக்குத் தக்கபடி செய்தால் அது அழகாயிருக்குமா! ஒரே கையைத் தட்டுவதுபோல் தட்டிக்கொண்டிருந்தால் நன்றாயிருக்குமா! நீயே சொல்லு. தாலிக்கும், கூறைக்குங்கூட வக்கத்துப்போன பிள்ளைகளுக்கு கல்யாணம் எதற்கு சொல்லு. இதுகூட வாங்க சக்தியில்லாதவன் பெண்டாட்டியை எப்படி சம்ரக்ஷிக்கமுடியும் என்று பரிகாஸம் பண்ணமாட்டார்களா! விலைக்கு வாங்கிய மாப்பிள்ளைதானே என்கிற அலக்ஷிய குணம் எத்தனை பெண் வீட்டாரிடம் இருக்கிறது தெரியுமா! இது எவ்வளவு கேவலமாயிருக்கிறது பாரு. இதற்கெல்லாம் உங்க அத்தை பயந்துவிட்டாளா! எந்த மார்வாடியிடம் ஒன்றுக்கு 5 வட்டி வீதம்

கடன் வாங்கி குடும்பம் திவாலாவது என்று நடுங்குகிறுளா பாவம்!

க :—ஐயோ ராமா! உதயமாறு அஸ்தமித்தால் இதே வியாபாரந்தானே. '500 ரூபாயிக்குச் சம்மதமானுல் பேசட்டும். இல்லாவிட்டால் வேண்டாம்' என்று ஒரு பிள்ளை வீட்டார் சொன்னுர்களாம். அதற்கு எங்க அத்தையின் பிள்ளை சொன்னுனும். '500 இல்லை ஆயிரம் வேண்டுமாயினும் தருகிறேன். பணத்தை மனையில் வைத்துக் கல்யாணத்தைச் செய்துகொண்டு போங்கள். பெண்ணைப்பற்றிக் கவலை இல்லை' என்று முகத்திலறைந்ததுபோல் சொன்னுனும்.

ம:—பேஷ்....சபாஷ்...நன்ருகச் சொன்னுன். அவன் வாயிக்கு வெறும் சர்க்கரைபோட்டால் போதாது. திரட்டுப்பாலைத்தான் போடவேண்டும். பெண்களை மணக்க ஆசைப்பட்டால்தானே கத்திரிக்காய், வெண்டைக்காய் பேரம்போல் பணத்திற்கல்லவா பறக்கிருர்கள். அதிலும் இன்னொரு வேடிக்கை பார்த்தாயா! கல்யாணி! ஐவேஜி, அந்தஸ்து முதலிய எதுவும் இல்லாதவர்கள்தான் தம் யோக்யதையை மறந்து பேரம்பேச வந்துவிடுகிருர்கள். சாப்பிட சாதமில்லாவிட்டாலும் இம்மாதிரி ஷரத்பேசுவதில் குறைவில்லை. என்று பிறர் பரிகஸிக்கமாட்டார்களா! அதையேன் நினைப்பதில்லை? ஆனுல் இல்லாதவர்கள் என்ன செய்வார்கள் என்று சிலர் பல்லவி பாடுகிருர்கள். அதற்கு என்ன செய்யலாம் தெரியுமா! 'அம்மா! எங்களுக்கு ஒன்றுமே சக்தியில்லை. நீங்களே எல்லாம் செய்துகொண்டு கன்யாதானம் செய்துகொடுங்கள். எங்கள் சக்திக்குத் தகுந்த கூரைசேலையும், அரை பவுனுக்காவது திருமங்கல்யமும் செய்கிருேம். இதுதான் எங்களால் முடியும்' என்று மரியாதையாய் சொல்லிவிடலாம். அப்போதும் பிள்ளைக்குப் பிச்சைக்காசு வாங்க வேண்டாம். என்ன சொல்கிருய்?

க :—வாஸ்தவம்...இதை எல்லாம்விட வேடிக்கையல்லவா எங்க அத்தை வீட்டு விஷயம்? பேரம் பேசும் வியாபாரிகளாகிய பிள்ளை வீட்டாரின் வருகைக்குக் குறைவில்லை. அத்தையின் கடைசீ குட்டி கற்பகம் இருக்கோன்னே! அதுக்கு வரன் தேடித்தேடி அலுத்துப் போய்விட்டாள். முதலில் பார்க்க வந்த எல்லோரும் "ஐயோ! பொண்ணுக்கு பலமே இல்லையே! இடறி விழுந்துவிடுவாள்போலிருக்கே. இவளால் என்னமாய்க் குடும்பம் நடத்தமுடியும்?......வேண்டாம்மா! பெண் வெறும் பக்கை" என்ற பல்லவியையே பாடினுர்கள். அதுவும் அப்படித் தானிருந்தது. பிறகு உடம்பு தேறுவதற்குக் கொடுத்த மருந்துகளும் டானிக்குகளும் கூஷ்பாண்டலேகியமும், கணக்குவழக்கில்லை. இதற்காக 2 வருஷம் ஓடவிட்டா அடேயப்பா! பெண்ணுவது பெண் பெத்த தாயாருக்கே அடையாளம்தெரியாது உப்பிவிட்டது.

மங் :—அப்படியா! இப்ப கல்யாணமாகிவிட்டதா!

கல் :—அதைத்தான் சொல்லவந்தேன். இந்த வருஷம் பூராவும் யார் பார்க்கவந்தாலும், "அடேயப்பா! இது பெண்ணு! அல்லது

நெல் கொட்டும் குதிரா! பிள்ளைக்குத் தாயார்போலும், தமக்கை போலுமுள்ள பெண் எங்களுக்கு வேண்டாம். ஐயோ பாவம். பெண்ணால் நாலடி நடக்கக்கூட முடியாது மூச்சு வாங்கும்போல் இருக்கிறதே. உட்கார்ந்தால் எழுந்திருக்க ஒரு ஜாமம் ஆகும்போல் இருக்கே. போரும் போரும்! இந்த பூதம் வேண்டாம்' என்று சிலர் நேரிலும், சிலர் மூன்றும் மனிதர்களின் மூலமும், சிலர் கடிதமெழுதியும் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். அத்தனை பணச் செலவில் ஊட்டங்கொடுத்து வளர்த்த பெண்ணை இப்போது பட்டினிபோட்டும் மருந்து கொடுத்தும் இளைக்கவைக்கலாமா, என்று குழம்பித் தவிக்கிறாள்....என் பெண் இயற்கையிலேயே ரெட்டை நாடியாயிற்றேயென்று எனக்குப் பயம் பிடுங்கித்தின்கிறது.

மங் .—அடடடா! வேடிக்கையாகவல்லவோ இருக்கிறது. உன் பெண்ணையே நீ ரெட்டைநாடி என்றும் வளர்த்தி என்றும் சொல்லிவிட்டால் வடநாட்டிலுள்ள, பம்பாய்ப் பெண்களையும், பூனா பெண்களையும் பார்த்தால் நீ என்னதான் சொல்வாயோ! உன் பெண்ணைப்போல் வளர்த்தியுள்ள பெண்களுக்கு வயது 10-தான் இருக்கும். அதற்குள்ளாகவே அத்தனை வளர்த்தி. செந்தாமரைப்பூ போல் சிகப்பு, முகத்தில் சுறுசுறுப்பான களை...எல்லாவற்றையும் விட அந்த ஊர் பெண்டுகளுக்குள்ள தைரியமும், துணிச்சலும் சொல்லவேமுடியாது.

கல் :—அப்படியா! ஏன்? அவர்கள் என்ன செய்கிறார்கள்?

மங் :—செய்வதற்கென்ன இருக்கிறது. பணக்காரர்களும் சரி; ஏழைகளும் சரி, பயமென்பதே இல்லாமல் தைரியமாய் கையில் ஒரு பையும் குடையும் எடுத்துக்கொண்டு ஜம்ஜம்மென்று சாமான் வாங்க கடைக்கும் கறிகாய் வாங்க மார்கெட்டுக்கும் வரும் அழகைப் பார்த்தால்தானே தெரியும்.

கல்:—பெண்களா மார்கெட்டுக்கும், கடைக்கும் போகிறார்கள்?

மங் :—போனால் என்ன? நீ அந்த பக்கம் பார்த்தால் தெரியும். கடைக்கோ, மார்க்கெட்டுக்கோ போவது அந்தப் பிரதேசத்தில் ஈனமோ, அவமானமோ வம்பளப்போ ஒன்றுமே கிடையாதே. அதற்கெல்லாந்தான் நம்ப ஊர் இருக்கிறதே. பரிகாஸம் செய்வதற்கும் வம்பு பேசுவதற்கும் அவர்களும் சளைப்பதில்லை. ஆனால் இந்தமாதிரி விஷயங்களில் ஒரு விகல்பமும் கிடையாது. காலையிலும், மாலையிலும் சாரிசாரியாய் பெண்கள் ஷோக்காய் செல்லும் அழகைப் பார்த்தாலே போதுமே...பணக்காரராயின் காரிலும், கோச்சிலும் வருகிறார்கள். ஏழைகளாயின் சாதாரணமாய் நடந்து வருகிறார்கள். செட்டும் சீருமாய் வேண்டிய சாமான்களின் அளவறிந்து பொருக்கி எடுத்துச் செல்லும் அழகைப் பார்ப்பதற்கே நான் தினம் கடைகளுக்குச் செல்வேன்....ஏன்? இந்தமாதிரி பெங்களூரில்கூட பெண்கள் தாமே சாமான்களை வாங்குகிறார்களே, நீ பார்த்ததில்லையா!

கல் :—நான் பெங்களூர் பார்த்திருந்தால்தானே மற்றதைப் பார்ப்பதற்கு? பெங்களூரில் எங்கு பார்த்தாலும் தோட்டங்களும் உலாவுவதற்கு அழகான இடங்களும் இருப்பதாகச் சொல் கிறார்களே! அப்படியே பம்பாயிலும் இருக்கிறதா!

மங் :—ஊம்....பம்பாயில் அடுக்கு அடுக்காக மெத்தைகள் உள்ள கட்டிடங்கள்தான் அதிகம்...நிமிர்ந்து பார்ப்பதற்குள் கழுத்து நோவு எடுத்துவிடுகிறது. பொருக்காகச் சில தோட்டங் கள்தான் இருக்கின்றன. ஹாங்கிங் கார்டன், விக்டோரியா கார்டன், சின்ன சின்ன பார்க்குகள் இதுதான் இருக்கு. இன்னும் வேறு எங்காவது இருக்கோ என்னவோ நான் பார்க்கவில்லை. உலாவுவ தற்குச் சொன்னாயே! அப்பப்ப! தெருவில் கிளம்பினால் பணமுள்ள வர்கள் உயில் எழுதி வைத்துவிட்டுத்தான் செல்லவேண்டும்.

கல் :—ஐயோ! அதென்ன அப்படிக்கூட்டமா!

மங் :—கூட்டமா என்று கேட்கிறாய்? உதாரணத்திற்கு நம்ம ஊரில் சாயங்கால வேளையில் சைனாபஜார் ரோட்டு எப்படி இருக்கிறது?

கல் :—அடேயப்பா! அந்த தெருவில் மனிதர்கள் அசந்து மறந்து நடக்கமுடியுமா! ஆபத்தாகவல்லவா முடியும்?

மங் :—இதற்கே இப்படி யிருந்தால் அந்த ஊர் தெருவுகளை அதிலும் பூலேச்வர், கல்பதேவி முதலிய இடங்களில் பார்த்தால் நீ ஒரு அடிகூட எடுத்து வைக்கமாட்டாய். மெத்தை போட்ட டிராம் வண்டியும், பஸ்ஸும், சாதாரண கோச்சுவண்டியும், மோட் டார்கார்களும், ஸைக்கில்களும், சொல்லமுடியாது. மெத்தை போட்ட டிராமும், பஸ்ஸும் பார்ப்பதற்கு பூதத்தைப்போல் தோன்றியதேயன்றி வண்டியாகத் தோன்றவே இல்லை. குறுக்கும் நெடுக்கும் போனவண்ணமாகவே இருக்கும். இதன் மத்தியில் நான் முன்பு சொன்னபடி பெண்கள் ஜோராய்க் கிளம்பிவிடு வார்கள். எதிரில் செல்லும் ஆண்பிள்ளைகளைக்கூட சில பெண்கள் இடித்துத்தள்ளிக்கொண்டு போனதைப் பார்த்தபோது என் உடம்பே சிலிர்த்துவிட்டது. அந்த பரதேவதைகள் வருவதைப் பார்த்து எதிரில் வருகிறவர்களும் பக்கத்தில் போகிறவர்களும் தாமாகவே ஒதுங்கிக்கொண்டால்தான் பிழைக்கலாம்.

க:—ஐயயோ! அத்தனை துணிச்சலா அந்த ஊர் பெண்களுக்கு?

ம :—எல்லோருமே அப்படியிருப்பார்களா! சிலர் அத்தனை தைரியமாய் இடித்துத் தள்ளியதை நானே கண்ணாறப் பார்த்துத் தான் சொல்லுகிறேன்.

க :—அடேயப்பா! அவர்கள் பெண்களா! பூதங்களா! தெரு வில் இம்மாதிரி நடப்பவர்கள் வீட்டில் எப்படி நடந்துகொள் வார்களோ!

ம :—வீட்டு விஷயம் நமக்கென்ன தெரியும்? ஆனால் நான் இறங்கி இருந்த வீட்டிற்கு எதிர் வீட்டில் மருமகள் ஜோராக சிங்

காரித்துக்கொண்டு சதா வீதி ஜன்னல்பக்கமே நிற்பாள். சிங்காரம் என்றால் நம் பக்கத்தைப்போன்ற நகைகளும் ஜரிகை சேலைகளு மில்லை. வெகு அழகான புடவைகளை தினுசு தினுசாய் உடுத்திக் கொண்டு கையில் ஒரு கண்ணாடி வளையல், நெத்தியில் குங்குமம், கழுத்தில் ஏதாவது இருந்தாலும் இருக்கும், இல்லாவிடினும் இல்லை; அவ்வளவுதான்: ராஜாத்திபோலிருப்பாள்.

க :—நகைகள் அணியாவிட்டால் லக்ஷ்யம் செய்வார்களா !

ம :—அந்த ஸ்ரீமத்கம்பீரமெல்லாம் நம்பப் பக்கத்தில்தானே! அங்கு அதைப்பற்றிப் பேச்சே இல்லை...மாமியார் வந்து கையை யும் காலையும் ஆட்டி தைதை என்று குதிப்பாள். இறைவாள். பிள்ளை யிடம் கூப்பாடு போடுவாள். அவள் அந்த பக்கம் போனதும் தம்பதிகள் கடகடவென்று நகைப்பார்கள். பேசாப் படம் பார்ப் பதுபோல் இதை நான் பார்த்துக்கொண்டே இருப்பேன். பள்ளிக் கூடம், காலேஜி முதலியவைகளுக்கு பெண்கள் போவது நம்ப ஊரிலும் இருப்பதால் அதிசயமில்லை. கடைகளிலும், மார்க்கட்டி லும் நூற்றுக்கு 75 பேருக்குமேல் பெண்களைத்தான் பார்க்கலாம். அதுதான் எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

க :—இதைத் தவிர வேறு அதிசயமே இல்லையா ! கோயில் குளம் வேறு ஒன்றுமில்லையா ?

ம :—ஊம்...கோயிலுக்கும் குளத்திற்கும் நம் தென்னிந்தியா தான் பேர்போனது. வெளித் தோற்றத்தைப் பார்க்கும்போதே கோயில் என்று தெரிவதற்கு அழகியகோபுரங்களும் மற்ற சின்னங் களும் இந்தப் பக்கம் இருப்பதுபோல் அங்கு ஒன்றும் கிடையாது. சாதாரண பஜனைக் கூடம் போலும் மடங்கள் போலும் இருக்கும் கட்டிடங்கள்தான் கோவில். மகாலக்ஷ்மி கோவில், ராமர் கோவில், பாண்டுரேங்கன், விட்டல், ருக்குமாயி முதலிய எத்தனையோ கோவில்க ளிருக்கின்றன. ஷோக்காக எலக்ட்ரிக் லைட்டு ப்ரகாசத்தில் சலவைக் கல்லால் ஸ்வாமி அலங்காரத்துடன் ஜகஜ்ஜோதியாய் காக்ஷி யளிக் கிறார். ஆனால் ஒன்று. நம்ப பக்கத்து கோவிலில் சுண்டல், வடை வினியோகச் சண்டையும், பணக்காரர்களுக்கு அதிகநேரம் ஸ்ரீசடகோபத்தைத் தலையில் கவிழ்த்து வைப்பதும், ஒரு மணி காலம் கற்பூராரத்தி செய்வதும் ஏழைகளின் தலையில் லொட்டென்று சடாரியை இடித்துவிட்டு ஏனோ தானோ என்று சேவை செய்து வைப்பதுமான பக்ஷபாதமும் அஸங்கியமும் நான் பார்த்தவரையில் அங்கு காணப்படவில்லை.

க:—ஆனால், எப்படி ஸேவிப்பது பிரஸாதம் ஒன்றும் கிடையாதா!

ம :—அவரவர்கள் கொண்டுவந்து நைவேத்தியம் செய்யும் பிரஸாதந்தான் உண்டு. இன்னொன்று பாரு. புஷ்பத்தை நிறைய போட்டுக்கொண்டு பத்து பதினைந்து ஸ்திரீகள் ஏதோ அவர்கள் பாஷையில் பாட்டு பாடிக்கொண்டே புஷ்பத்தைக் கட்டுகிறார்கள். ராமர் கோவில் அது. அந்த ஸன்னிதிக்கு எதிரில் கம்பி போட்டி

ருக்கிறது. அதற்கு மத்தியில் ஒரு ஸரஸ்வதி பீடத்தில் பெரிய புஸ்தகம் வைத்திருந்தது. ஒரு தம்பூரா, ஒரு சித்தார், ஒரு ஹார்மோனியம், ஜால்ரா, சப்ளா, தபலா முதலிய பஜனைக் கருவிகள் வைத்திருந்தன. இதைப் பார்த்ததும் பஜனையைப் பார்த்துவிட்டுத் தான் போகவேண்டுமென்று சற்று நின்றோம்.

பக்தகோஷ்டிகள் வந்து உட்கார்ந்து வெகு ஆனந்தமாகப்பாடி பஜனை செய்த அழகைக் கூறத்திறமில்லை. பஜனை செய்துவிட்டு அங்கு துளசியும், புஷ்பமும், ஒரு தட்டிலிருந்ததைத் தாமே எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அடுத்த 5 நிமிஷத்திற்கெல்லாம் இன்னொரு செட்டு வந்து அப்படியே செய்தார்கள். ஸ்திரீகள் கோயிலைச் சுற்றி வலம்வந்து ராமர் எதிரில் நின்று "ஹே பக்வான்!" என்று ஆரம்பித்து ஏதோ சொல்லுகிறார்கள். குழந்தைகளின் கன்னத்தை இருகைகளாலும் தடவி, நம் கன்னத்தில் சுடுக்கி த்ருஷ்டி கழிப்பதுபோல் பகவானுக்குச் செய்கிறார்கள். அவர்களும், ஏதோ பாடிவிட்டுப் போய்விடுகிறார்கள். சுமார் ஒருமணி காலம் இந்த கோயிலில் பஜனையைக்கேட்டு களித்தேன். கோயில் எத்தனை சுத்தமாயிருக்கிறது தெரியுமா!

க:—ஏன் சுத்தமாயிருக்காது? நம்ப ஊரைப்போல் சக்கரைப் பொங்கல், தத்யோதனம், பொங்கல், புளியோரை முதலியவற்றைத் தின்றுவிட்டு சுவர்களிலும் ஸ்வாமி சன்னிதித் திரைகள், கதவுகள் முதலிய விடங்களிலும் கையைத் துடைத்தால் அங்கும் இதே கதியிருக்கும். ஸ்வாமிக்கு நைவேத்யம் செய்த வாழைப் பழத்தை கோயிலிலேயே பக்திப் பெருக்கால் உரித்துத் தின்றுவிட்டு சில பக்தர்கள் தோலை எறிந்துச் செல்கிறார்கள். அடுத்துவரும் பக்தர்கள் அந்தத் தோல் சறுக்கி விழுந்து அவஸ்தைப்படுகிறார்கள். இது கூடத் தெரியாவிட்டால் அதற்கும் யார் ப்ரசாரம் செய்வது?...சரி. இது கடக்கட்டும். இன்னும் என்ன அதிசயம் சொல்லு?

ம:—மகாலக்ஷ்மியின் பிம்பம் வெகு நன்றாயிருக்கிறது. ஆனால் கோயிலுக்கு வெளியில் உள்ள ஆபாஸம் வாந்திக்கு வருகிறது. புனிதமான கோயிலின் சுற்றுப்புறங்கள் இத்தனை நாற்றமும், அசங்கியமுமாக வைத்திருப்பதைப் பார்த்தால் பிடிக்கவே இல்லை. வெகு அழகான சின்னபெண்கள் கோயில்வாசலில்கடைகளில் உட்கார்ந்து பேரம் செய்கிறார்கள். அந்த அழகிய சிறுமிகளைப் பார்ப்பதற்காகவே கூட்டங் கூடுவதுபோல் நிறைய தடியன்கள் நின்று கும்மாளமடிக்கிறார்களேயன்றி காலணா குங்குமம்கூட வாங்குவதில்லை.

பம்பாதேவி கோவிலுக்குப் போனோம்...ஆனால் ஒன்று. நம்ம ப்ரதேசத்து அம்மன்களைப்போல் அங்கு சில கோயில்களில்இல்லவே இல்லை. பார்ப்பதற்குப் பயங்கரமாய் சிகப்பு வர்ணமும் பெரிய கண்களும் ஏதோ மாதிரியிருக்கின்றன. அங்கும் வெகு பக்தியுடன் கூட்டமாக வந்து தரிசித்தார்கள். அது பெரிய கோவில். அதுபோல் இன்னும் எத்தனையோ கோவில்களைப் பார்த்தேன்.

(தொடரும்)

## எங்க பாட்டிகளின் பரிபாஷை

எங்கபாட்டி எத்தனையோ கெட்டிக்காரிதான். மகா சமர்த்தி, இந்த ஊரே அவளை நன்றாக அறியும். ஆனால் இக்காலத்திய பாட்டிகளைப்போல் படித்தவளல்ல. எல்லாரிடமும் பேசுவதற்கும், எந்த பாஷையைப் பேசுவதற்கும் தியங்கமாட்டாள். எங்கபாட்டியும் அவளுடைய ஆப்த சினேகிதைகளாகிய சானுப் பாட்டி எச்சிப்பாட்டி. குட்டிப்பாட்டி முதலியவர்கள் சேர்ந்து பேச ஆரம்பித்துவிட்டாலோ, எங்களுக்குச் சிரித்து வயிறறுந்துபோய்விடும். அவைகளை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது. மறந்து போனது போக நினைவிலிருப்பதைச் சொல்கிறேன். இதைப் படிக்கும்போது உங்கள் பாட்டிபேசியதும் நினைவிற்கு வருமல்லவா!

சானுப்பாட்டி :—திங்காணம்! ஓம்பேரனுக்குப் பரீக்ஷை பாஸாச்சோ!

திங்காணம் :—ஓ! வேஷ்ட்ளாஸுலே (பஸ்டுக்ளாஸ் என்பது பொருள்) பாஸாச்சே. அவன் என்ன அசடா!....ஓம்பேரனுக்கு,

சானு :—அவனுக்குத்தான் அப்போ டைபார்ட்டி (டைபாயிடு) ஜெரம் வந்துடுத்தே. தெனம் டாக்தொரெ (டாக்டர்) வறதும் தர் மாட்டர் (தர்மாமீட்டர்) வெக்கறதும், இம்மிண (எனிமா) குடுக்கறதும் இங்க்லீஷன் (இஞ்ஜெக்ஷன்)பண்றதும் வீடு திம்மலோகமா ஆச்சுப்பத்திரி (ஆஸ்பத்திரி) போலென்ன இருந்தது. எஸ்ஸரே (எக்ஸ்ரே) போட்டக்ராப்கூட புடிச்சுபாத்தாளே மாயமான யாதியான்ன (வ்யாதி) வந்துது. அவன் பரீக்ஷக்கே போகலயே. இப்பகுணம் ...ஓம்போத்திக்கு (பேத்திக்கு) கெல்லாணம் (கல்யாணம்) ஆச்சா!

திங்கா:—அத்தேயேங் கேக்கரே!...எம்பிள்ளேக்கி என் வார்த்தே லெக்ஷியமில்லே. சனேதா (சினேகிதர்கள்) வார்த்தைதான் ஒசத்தி. எங்க மாமா தாதா பேரனுக்கு அத்தாமன்னியோடெ சித்திக்கு மூத்தா பேத்தியோடெ மருமானுக்கு மச்சினன் புள்ளேயே, தங்க மாட்டமா இருக்கான்; சாட்டாண்டி (ஷார்ட்ஹாண்டு) டைபார்ட் டிங்கு (டைப்ரைடிங்கி) எலக்கட்டரி வேலே (எலக்ட்ரிக்) எல்லாம் வேஷ்ட்ளாஸிலே பாஸி பண்ணியிருக்கான். அவனுக்கு குடுத்துடு ஒறவு வுட்டுப்போகாதே இருக்கும்னு சொல்றேன். அவன் கேக்கலே. அவனோடே வார்த்தை சொல்ல சாவகாசம் ஏது? மூக்கா வாசினாலும் ஆச்சுப்பத்திரிலே நைட்டு ரூட்டி (நைட் ட்யூட்டி) டே ரூட்டி, ஆபர்ஸன், (ஆபரேஷன்) ப்ளட்டு எஜ்ஜாமீஸன் (ப்ளட்டு எக்ஸாமினேஷன்) எத்தனையோ சொல்விண்டு பூட்ரான். ஏதாவது சொன்ன, ஒனக்கு ஒன்னுமே தெரியாது இந்தகால பாஷன் (பேஷன்) எச்பீரஞ்சு, (எக்ஸ்பீரியன்ஸ்) ஒண்ணு மில்லென்னு வைய்யரான்.

எச்சிப்பாட்டி :—இந்த காலத்து கோலண்டியம்மா! கோலம். எம்பிள்ளே இன்ன சொல்ரான் தெரியுமா! லேடியோலே, (ரேடியோ) பொண்ணுபாடணமாம். பாட்டுமுண்டன் (பேட்மெண்டன்) ஆடணமாம். காரம், (கேரம்) ஆடணுமாம். சாரசெட்டு (ஜார்ஜெட்டு) பொடவை உடுத்திக்கிணமாம். ஷோஷலா (ஸோஷல்)

இருக்கணமாம். எல்லாருக்கும் செக்காண்டு (ஷெக்ஹேண்டு) குடுக்கணமாம். ஸில்பர் (ஸ்லிப்பர்) போட்டுண்டுதான் நடக்கணமாம். தெனம் எஸ்ஸஸ்ஸிஸ்ஸீ (எக்ஸர்ஸைஸ்) பண்ணணமாம். மோட்டாக்காரே அவளே டெய்வு (ட்ரைவ்) பண்ணணமாம். ஸைஹிக்கெல் (ஸைக்கில்) வுடணமாம். களப்புக்குப்போயி (க்ளப்பு) லொட்டி, பன்பட்டன், பிச்சுகோத்து, ப்ளூட்டு ஷால்ட்டு, (ரொட்டி, பன், பட்டர், பிஸ்கேட், ப்ரூட்ஸெலேட்) இன்னென்னமோ கண்டத்தையும் வாங்கி தின்னணமாம். அதுக்கு ஒத்துரும் வாயே தறக்கக்கூடாதாம். என்ன பாஷணே! என்ன பாத்தாளியோ! எனக்கு கட்டோடெ பிடிக்கல்லே.

குட்டிப்பாட்டி:-ஐயோ! அத்தே ஏங்கேக்கரே. போதுவிடிஞ்சா! போதுபோனு! எம்போத்திக்கி பெண்சுகளாம், பெண்சு, (ப்ரெண்ட்ஸ்) வந்தபடிதான். டீயெக்கொண்டா! காப்பியெக்கொண்டா! ஓவர்டீன் (ஓவல்டின்) கொண்டான்னு ப்ராணனே வாங்கரா! டீ பாட்டியாம், டின்னர் பாட்டியாம்...(பார்ட்டீ) யாருக்குவேண்டியிருக்கு. ஒரு அந்த அவசரம்னு க்ருஷ்ணுலெண்ணையைக் கொட்டி பெயர்பாஸ் பொட்டி வத்தியே கீறி அடுப்புமூட்ட தெரியாது. (கெரோஸினுயில், பயர்பாக்ஸ்) ஜோரா டெஸ் (ட்ரஸ்) பண்ணிண்டு நிக்கத்தான் தெரியும். அந்த காலத்துலே நாம்ப வேலே செய்தாப்பலே இதுகளுக்கு செய்யவருமான்னு! இப்பதான் போலெ இருக்கு. நம்ப திருக்கோக்ஷியூர் முத்துகிக்ஷணேடே புள்ளே சந்தானகிக்ஷனுக்கு சட்டிபூர்த்தி சாந்தியாச்சே! கக்ஷப்பட்ரவாளுக்கெல்லாம் பட்டுகரே வேக்ஷி வாங்கி இக்ஷமா தானம் பண்ணினனே, அப்ப எத்தனே லக்ஷ ஜனம் வந்திருந்துது. ஒரு வேலைக்காரனுண்டா! சமையல்காரந்தான் உண்டா! ஒரு செக்கண்டுலே நாங்களே வெட்ளாஸா சமயல் பண்ணிப்புட்டோம்.

ஸந்தானத்தோடெ பெண்சுகள் டுப்புட்டி கலெட்டர், (டிப்டி கலெக்ட்டர்) ரெவினு இனிஜிபெட்டர், (ரெவின்யூ இன்ஸ்பெக்ட்டர்) சக்கிலி இன்ஜிபெட்டர், (ஸர்கிள் ) எட்டுமாஷ்டர், (ஹெட்மாஸ்ட்டர்) எத்தனையோ ராயர், (லாயர்) எத்தனையோ சூப்ரண்டு. எல்லாரும் வந்து சாப்புட்டா! பலே பேஷ், சமயல் எஸ்கலெண்டு (எக்ஸலேண்டு) வெஷ்ட்ளாஸ்...ன்னு சொல்லிண்டே சாப்டது இப்பதாம்போலே இருக்கு. இந்த பசங்களாலே என்ன முடியும்? கட்டு புஸ்தகத்தெ தூக்கிண்டு பள்ளிக்கூடம் போரதும், திரும்பி வந்து ஓமஓறக்கு, (ஹோம் ஒர்கு) ன்னு எழுத ஒக்காண்டுடுரதுகள். மொதல்லெ அதுகளுக்கு நம்மாட்டம் பலமே இல்லையே! எப்பப் பாரு. தானீக்கு (டானிக்) சாப்பட்ரது. ஒருஸூன் கிளிகோஸ் போட்டு(ஸ்பூன் க்ளூகோஸ்) எதிலேயோ சாப்பட்ரது. இதுகள்ளாம் என்ன குப்பேகொட்டபோரதோம்மா! பாக்கும்போதே டாக்கு டீக்குன்னு ஷ்டேன்தா (ஸ்ட்ரெந்தா) இருக்கவேண்டாமா!

—வை. மு. கோ.



# விகடவெடிகள்

"விருச்சிகம்"

தகப்பனார் :—ஏண்டா தடிப்பயலே! எத்தனை தரம் சொல்லிக் கொடுத்தாலும் தப்பு தப்பாக எழுதுகிறாயே! உன் தலையிலென்ன களிமண்ணா இருக்கிறது?

சிறுவன் :—நான் சின்ன பையனாயிற்றே! எனக்கென்னப்பா தெரியும். ஆனால் "அப்பாவைப்போலவே நீயுமிருக்கிறாய்" என்று அம்மா அடிக்கடி சொல்றா?

1. புருஷன் :—ஏண்டீ! வெறும்மெ பக்கத்துவீட்டு ஜன்னலாலே எட்டி எட்டிப் பார்க்கிறாய். உன் புத்தி என்ன வரவர இப்படிக் கெட்டுவிட்டது? வரயா இல்லையா!

மனைவி :—ஐயோ ராமா! நீங்கள் குடித்தனக்காரப் பெண்ணை எட்டிப்பார்க்கிறாப்போல் நான் பார்க்கவில்லை. ஏதோ ஓசை கேட்டது. நம்மைப்போல் அவர்களும் சண்டை போடுகிறார்களா என்று பார்த்தேன். சண்டை இல்லை. குலாவல்தான்.

2. ஒருவன் :—நண்பா! ஒரு பத்து ரூபாய் கடன் கொடு. அவசரமாக ஒரு கோட்டு தைக்கவேண்டும். அடுத்த மாதம் கொடுத்துவிடுகிறேன்.

சினேகிதன் :—அப்படியா! இந்தா; ரூபாய்க்குப் பதில் என் கோட்டையே தருகிறேன். உபயோகித்துப் பின் திருப்பிக்கொடு. எனக்கு ஒரு அணா வண்ணாரக்கூலி நஷ்டத்துடன் நின்றுவிடும்.

3. தாதா :—டேய் பயலே! உனக்குத் தம்பி பிறந்துவிட்டதடா! சந்தோஷமாய் குதித்து விளையாடு.

பேரன் :—தாதா! நீ பொய் சொல்றே! ஓனக்குத்தான் தம்பி பிறந்திருக்கிறது. உன் வாயும் பொக்கை அதன் வாயும் பொக்கை. உன் தலையும் செப்புசெம்புபோலிருக்கு. அதன் தலையுமிருக்கு. உன் உடம்பும் சுருக்கம் விழுந்திருக்கிறது. அதன் உடம்பும் சுருக்கம் விழுந்திருக்கு. அது ஓனக்குத்தான் தம்பி. நீதான் குதிக்கணும்.

4. மனைவி :—என் சிக்கனத்தெப்பாத்தீர்களா! ஒரு மூட்டைக்கு ஓரணா கூலி கேட்டான். 5 மூட்டையை ரெண்டு மூட்டையாக் கட்டிவிட்டேன். ரெண்டணாதான் கூலி கொடுத்தேன். மூணணா மீத்திவிட்டேன்.

புருஷன் :—அடக்ரகச்சாரமே. நான் தான் பேசினபடி 5 அணா கொடுத்துவிட்டேனே. ஒன்னே யார் ரெண்டணா கொடுக்கச்சொன்னது? தலையெழுத்தே...

5.

# வாணியின் பிரசாதம்

ஸாஹித்தியகர்த்தா : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

**29-வது மேளகர்த்தா** **தீர சங்கராபரணம்**

ஜன்ய ராகம் : சங்கராபரணம்.

ஸ்வரப்படுத்தியவர் : ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.

ஆரோஹணம்—ஸம்பூர்ணம்.

| ஸ | ரி | க | ம | ப | த | நி | ஸ் |
|---|---|---|---|---|---|---|---|
| | சதுர் | அம்தர | சுத்த | | சதுர் | காகலி | |

அவரோஹணம்—ஸம்பூர்ணம்.

| ஸ் | நி | த | ப | ம | க | ரி | ஸ |
|---|---|---|---|---|---|---|---|
| | காகலி | சதுர் | | சுத்த | அம்தர | சதுர் | |

இராகம் - சங்கராபரணம். சதுரஸ்ரஜாதி - திருப்புடை.

## பல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ; ; ; | ● க ம பா த நி ஸ்ா நீ | ஸ்ா ; ; - ஸ்ா | ஸ்ாஸ்நிதா - பம |
| | | க ரு ணா நி | தே க | ம ல லோ |
| 2 | கமபகமரி | ● க ம பா த நி ஸ்ா நீ | ஸ்ா ; ; - நி ஸ் | ரீ ஸ் நி தா - ப ம |
| | ச ஞ | க ரு ணா நி | தே க | ம ல லோ |
| 3 | கமபகமரி | ● க ம பா த நி ஸ்ா நீ | ஸ்ா ; ; - த நி | ஸ்ரிக்ரிஸ்நி - தப |
| | ச ஞ | க ரு ணா நி | தே க | ம ல லோ |
| 1 | கமபகமரி | ● க ம கா க ம ரீ கா | கரிஸநிஸா - கம | பா த நிஸ்ரி - ஸ்நி |
| | ச ஞ | க ரு ணிம் ச | வைய் ய க | ரி ரா ஜ |
| 2 | தபா மகரி | ● கம த ப பம கம கரி | ஸநிதநிஸரி - கம | பதநிஸ் ரிக் - ரிஸ் |
| | போ ஷா | க ரு ணிம் ச | வைய் ய க | ரி ரா ஜ |
| | நிதபமகரி | ● | | |
| | போ ஷா | | | |

அநுபல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ; ; ; ● | மா பா ப ம க ம பா | த நி ஸ்ா ;- ஸ்ா | நீ ஸ் க் ரீ-ஸ் நி |
| | | த ரு ணு னி | மொ ற வி | னித ய |
| 2 | நிஸ்ரிநிதப ● | மா பா ப ம க ம பா | த நி ஸ்ா ;- ஸ்ா | நீ ஸ் க் ரீ-ஸ் நி |
| | தோ ணு | த ரு ணு னி | மொ ற வி | னித ய |
| 3 | தா நீ ஸ்ா ● | ஸ் நி ஸ்ா ஸ்ரிக் ம் க்ா | க்ா , ம்க்ரி-ஸ்ா | நீ ஸ் க் ரீ-ஸ் நி |
| | தோ ணு | த ரு ணு னி | மொ ற வி | னித ய |
| | தா நீ ஸ்ா ● | நி ஸ் ரீ ஸ் நி தா பா | மப தநிஸ்ரி-ஸ்ரி | ஸ் நி த பா,-மா |
| | தோ ணு ● | வ ர மி ச் சி | கா சி ன ப | ர ம த |
| | கமபகமரி ● | | | |
| | யா ளா | | | |

சரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| | ● | கா மா பா ; மா | கா மா ரீ - கா | மா பா ; - பம |
| | | மந் த ஹா ச | வ த ன வா | ரீ ஜ |
| | பதநிதபா ● | க ம பா ப ம கரி ஸா | ஸநிதநிஸா- ஸா | பா ப ம க ம-ரீ |
| | ச ர ண | அ ந் த மை ன | அ ர விந் | த மு க |
| 1 | காமாபா ● | மா பா ப ம கம பா | தா நீ ஸ்ா - ஸ்ா | நீ ஸ் க் ரீ-ஸ் நி |
| | லோ லா | சிம் த தீ ர்ச | ரா தா ஸ்ரீ | கோ தா |
| 2 | நிஸ்ரிநிதப ● | மா பா ப மகாம பா | தா நீ ஸ்ா - ஸ்ா | நீ ஸ் க ரீ-ஸ் நி |
| | நா தா | சிம் த தீ ர்ச | ரா தா ஸ்ரீ | கோ தா |
| 3 | தா நீ ஸ்ா ● | ஸ் நி ஸ்ா ஸ்ரி க்மக்ா | க்ா , ம்க்ரி - ஸ்ா | நீ ஸ் க் ரீ-ஸ் நி |
| | நா தா | சிம் த தீ ர்ச | ரா தா ஸ்ரீ | கோ தா |
| | தா நீ ஸ்ா ● | நி ஸ் ரீ ஸ் நி தா பா | மபதநிஸ்ரி- ஸ்ரி | ஸ் நி த பா,-மா |
| | நா தா | ப ந் த மே ல | ரா ரா சுந் | த ராங் க |
| | கமபகமரி ● | | | |
| | தீ ரா | | | |

முக்தாயிஸ்வரம்

| | | | |
|---|---|---|---|
| ● | ஸா, -ஸ்ாஸ்நித - ரிஸ் | நிதப - தபமகரி | பமகரிஸ - மகரி |
| ஸநிதநிஸரி - | ஸா ,-மகரி - ஸ ரி கா | , பமக - ரிகமா | , தபம - கமபா |
| , மகரிஸநி ● | | | |
| • ● | ஸ ரி க ரீ ஸ - ரிகமக | ,ரி-கமபம - பா | தா-நிதப- மாப |
| , - த ப ம -கமபதநிஸ்ரிக்ா - | ரிஸ்நி | தப -கமபதா-ப | மகரிஸ- ரிஸநித |
| ,பதநிஸரி ● | | | |

விஷயம் தெரியாது இதயம் துடிக்கின்றது. முகத்தில் ஈயாட வில்லை. சங்கடம் சகிக்காது நெஞ்சை யள்ளுகின்றது. "என்ன அநியாய உலகம்! இத்தகைய கொடிய பயங்கரச் சுழலில் என்னை சிக்கவைப்பதற்காகவா கல்யாணமென்கிற விலங்கைப் பூட்டி, என்னையும் ஒரு விலங்காக மாற்றத் துணிந்தார்கள்? ஐயோ! என் மனம் பொறுக்கவில்லையே! இத்தகைய அக்கிரமக் காக்ஷியைக் காண்பதற்காகவா நான் இங்கு வந்தேன்? இந்த அநியாயத்தை யாரிடம் சொல்வேன்? இந்த நிமிஷமே வானமிடிந்து என் தலையில் விழுந்து என்னை நொறுக்கிவிடக்கூடாதா? அன்றி பூமி வெடித்து என்னை விழுங்கிவிடலாகாதா! என் செய்வேன்?" என்று தத்தளித்த வாறு மதுசூதனன், தான் முன்பு உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்துவிட்டான்.

அவன் கண்முன்பு யாவும் வெறும் சூன்யமாகத் தோன்றிய தால் அதற்குமேல் அங்கு நிற்க மனம் சகிக்காமல் காவேரிக் கரைக்குச் சென்றுவிட்டான். பிறந்த நாள்முதல், ஒரு கலக்கமும் சஞ்சலமும் அறியாது, தெளிந்த மனத்துடனும் குதூகல இதயத் துடனும் இருந்தவனை முற்றிலும் சேற்றில் போட்டுப் புரட்டி யதுபோலாய்விட்டதால் அவனுக்கு ஒன்றுமே தெரியாத அயோ மயமான நிலைமை உண்டாயிற்று.

காவேரியைப் பார்க்கிறான். ஆகாயத்தைப் பார்க்கிறான். காவேரியின் சந்தோஷமான குதூகலத்தையும் சஞ்சலமற்ற ஓட்டத் தையும் பார்க்கும்போது மதுசூதனனுக்குப் பொருமையாயும் எரிச் சலாயுமிருந்தது. "காவேரித்தாயே! உனது அளப்பரிய மகிழ்ச்சியும் ஆரவாரமும் உன்னிடமே இருக்கட்டும். உனது குழந்தையிடமே காட்டி கர்வப்படாதே. நானும் உன்னைப்போல் சந்தோஷ சித்தனாக விருந்தால் நானும் உன்னைவிட ஆயிரம்மடங்கு அதிகமான கொந் தளிப்பைக் காட்டி உன்னை நாணி வருந்தச் செய்வேன். என் இதயம் கலங்கிப் பொங்கித் தவிக்கையில் உன் சந்தோஷத்தை என்னால் கண்டு சகிக்க முடியவில்லை. நீயும் ஓய்ந்துபோய் பேசாம லிரு" என்று தன்போக்காகப் பித்தன்போல் பேசிக்கொண்டான்.

உடனே ஒரு பெரிய சிரிப்பும் பெருமூச்சுமாக அவன் இதயத் திலிருந்து பீறிக்கொண்டு வந்தது. உள்ளுக்குள் செய்யும் சங்கடத்

தின் வேகம் அவன் நதிக்கரையில் உட்கார்ந்திருந்தும் தேகம்முற்றும் குபீரென்று வெயர்வை வெள்ளமாகப் பொங்கியது. "கல்யாண மாம்....சம்சாரமாம்...கர்மாதியாம்...எல்லாம் வேஷம்......கபட வேஷம்...கல்மஷப்பிண்டம். சீச்சீ! மாமியார் வீடாம். மண்ணுங் கட்டியாம். ஒரு உண்மையான பரிசுத்த அனுதைப்பிணத்திற்கு நான் சேவை செய்தது மாபெருங் குற்றமாம். வம்சத்தையே நாசம் செய்து வாழ்க்கையின் விளக்கை அவித்துப் பயங்கர இருளையுண் டாக்கும் கொடிய படுகுழியில் விழுவதற்குச் சற்றும் பயமோ, அச்சமோ, ஹீனயமோ ஒன்றும் காணவில்லையே! எத்தனை குதூ கலம், எத்தனை கொண்டாட்டம், எத்தனை கொள்ளையடிக்கும் புத்தி.. அடடாடா! மாய உலகமே! உன் விபரீதப் போக்கிற்கு எல்லைதான் இல்லையா?" என்று ஏதேதோ எண்ணி மனங் கொதித்தான்.

பொழுது போவதே தெரியவில்லை. வீட்டிற்குப் போவதற்கும் மனம் இசையவில்லை. ஊர் சந்தடி அடங்கும் சமயமாகிவிட்டது. காவேரிக்கரையில் உலாவ வந்திருந்த அநேகர் தீபாவளியைப்பற்றிப் பேசிக்கொள்வதும், புது மாப்பிள்ளைகளாக வந்திருப்பவர்கள் உத் ஸாகமும் குதூகலமும் கொண்டு பேசுவதும், தம்தம் மனைவியைப் பற்றியும் சீர்வகைகளைப்பற்றியும் பேசிக்கொண்டிருப்பதெல்லாம் இவன் காதுக்கு நாராசம்போல் தோன்றின.

பட்டினத்தார் பாடல்கள் ஒவ்வொன்றும் இவன் கண்முன்பு சித் திரத்தில் வரைந்த காக்ஷிபோல் தோன்றின. "சே! முட்டாள்களே! அபாரமான வெய்யிலின் வெப்பத்தில் தவிக்கும் மனிதனுக்கு நிலைமை மாறிப்போய், உருவத்தைக்கூடப் பாராமல் சில்லென்றிருக் கிறது ஒரு வஸ்து என்று எண்ணி நல்லபாம்பைக் கையில் பிடித்து மகிழ்ச்சியடைபவனின் கதி எப்படியோ, அப்படித்தாண்டா உன் கதியும். ஏ! மோகப் பித்துக்கொண்ட மடையா! எல்லாம் சுத்தப் புரட்டு. எல்லாம் கபடநாடகம், நம்பாதே, நம்பாதே!" என்று தன்னை மறந்து வாய்விட்டும் கூறிவிட்டான்.

வீட்டிற்குப் போவதற்கு மனம் வராது கலங்கியிருந்த சமயம், இவனைச் சோதிப்பதுபோல் உலாவ வந்த இவன் மாமனர் அங்கு வந்து "ஓ! மாப்பிள்ளையா! ரொம்ப நேரமாகிவிட்டதே! நீங்கள் சினி மாவிற்குப் போயிருப்பதாகவன்றோ நினைத்தேன். இங்குதானு இருக்கிறீர்கள்?" என்று வாஞ்சையுடன் கேட்டார்.

மதுசூதனனுடைய தேகமே தீப்பிடித்துக்கொண்டதுபோல் எரிகிறது. மாமனார் எங்கு சனியன்போல் வந்து சேர்ந்தார் என்றே நினைத்தான். அவர் கேட்டதற்குப் பதில் கூருமலேயே இருந்தால் அவர் என்ன நினைப்பார் என்ற யோசனையால் பேசத் தொடங்கி "ஆம். சினிமாவுக்குப் போயிருந்தேன். அங்கு கண்ட ஆபாஸ ஸீனைப் பார்க்க மனமின்றி இங்கு வந்துவிட்டேன்" என்று தன் மனத்திலிருப்பதை மறைத்துக் கூறினன்.

மாமனர்:—ஆமாம் ஸார்! நாசமாய்ப்போன சினிமாப் படங்கள் வரவர ரொம்பக் கேவலமாகிவிட்டன. நான் சினிமாவுக்கே போவதுமில்லை. வீட்டிலும் யாரையும் அனுப்புவதுமில்லை. இம்மாதிரி படங்களைப் பார்த்தால் பசங்கள் கெட்டுப்போய் விடுவார்களல்லவா?...

இந்த வார்த்தைக்கு மதுசூதனனல் பதில் சொல்ல முடியவில்லை. கோபமும் ஆத்திரமும் இதயத்தில் மல்யுத்தம் செய்தன. இவன் பதில் கூறும்வரையில் அவர் சும்மா இல்லாது "வாருங்கள் மழை வருகிறது. வீட்டிற்குப் போகலாம்" என்று கூறி நடக்க வாரம்பித்தார். பாழும் மழையும் வந்ததால் மதுசூதனனும் எழுந்து வந்தான்.

ஆனல், 'உடம்பு சரியில்லை' என்று கூறிவிட்டுச் சாப்பிடாமல் படுத்துவிட்டான். பாலும் சில பழவகைகளையும் மட்டும் சாப்பிடும் படியாகக் குட்டி மைத்துனன் கொண்டுவைத்துச் சென்ருன். அதை அவன் கண்ணாலும் பார்க்கவில்லை. சில நிமிஷத்திற்கெல்லாம் ராஜமும், லக்ஷ்மியும் அங்கு வந்து "ஏன் சாப்பிடவில்லை?" என்று விசாரித்தார்கள். "பசிக்கவில்லை. இந்தப் பாலைக்கூட சாப்பிடப் போவதில்லை" என்று கூறினன்.

ரகஸியமாய் தாயும் மகளும் அங்குள்ள பாலையும் பழத்தையும் ஒரு கை பார்த்துவிட்டார்கள். மாப்பிள்ளை சாப்பிட்டதாகப் பெருமையுடன் கூறிக்கொண்டே டம்ளரையும், தட்டையும் உள்ளேயனுப்பிவிட்டு..."மதுசூதன! நாளை உனக்கு வைர மோதிரமும் ரிஸ்ட்டு வாட்சும் போட்டால் சரி. இல்லையேல் வேஷ்டியைமட்டும் வாங்கிக்கொள்ளாதே. அசடுபோல் நடந்து எங்களை அவமானத்தில் மாட்டி விடாதே!" என்று தாயார் தர்மோபதேசம் செய்து விட்டுப்போய் படுத்துக்கொண்டாள்.

மதுசூதனனுக்கு ஒன்றுமே தோன்ருது மனங் குழம்பியது.

படுக்கையில் படுப்பது முள்ளூ குத்துவதுபோல் வேதனை செய்தது. கதவைத் தாளிட்டுக்கொண்டு சற்று யோசித்தான். ஏதேதோ எண்ணிக் குழம்பிப் பின் ஒரு முடிவுக்கு வந்து ஒரு கடிதம் எழு தினுன். இன்னொரு துண்டு கடிதம் எழுதி அதோடு வைத்து ஒரு கவரில் போட்டான். மாமனுரின் விலாசத்தை எழுதி, கையில் எடுத் துக்கொண்டான்.

இரவு நிச்சப்தம் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. நித்திரா தேவியின் வசம் எல்லோரும் ஐக்யமாகிவிட்டார்கள். மதுசூதனன் ஓசைப்படாமல் அவ்வறையை விட்டு வெளியில் வந்து தன் மாம னுரின் அறைக்குச் சென்று அவர் மேஜைமீது இக் கடிதத்தை ஓசை செய்யாது வைத்துவிட்டு வெளியே வாசலுக்கு வந்தான். கதவைத் திறந்ததுதெரியாது திறந்து, சாத்திக்கொண்டு வெளியே போய் விட்டான்.

அவனுடைய மனமும், தேகமும் காற்றுடன் காற்ருய்ப்பறந்து சென்றன. 'எங்கு போகிரேம், என்ன செய்கிரேம்?' என்ற உணர்ச்சியற்று நடக்கும் மதுசூதனன் தன்னையே மறந்தான். சூன்யமாய்க் காணப்பட்ட உலகையும், மக்களையும் வெறுத்தான். எல்லாம் வேம்பாய் தோன்றின.

## 9

எல்லாம் வேம்பாய்த் தோன்றின. சூன்யமாய்க் காணப்பட்ட உலகையும், மக்களையும் வெறுத்தார். "மாப்பிள்ளை எங்கே மாயமாய் மறைந்திருப்பார்?" என்கிற மர்மம் தெரியாததால் வாச லில் தலைகாட்ட மானம் போயிற்று. இங்கு தலை தீபாவளியாத லால் இன்னும் அக்கம் பக்கத்தில் அழைக்க வரவில்லையே என்று அவர்கள் எட்டி எட்டிப் பார்த்தார்கள்.

அடுத்த வீட்டு அலமேலுவுக்கு அதற்குள் ஆத்திரம் அடித்துக் கொண்டதால் புறக்கடையிலுள்ள குட்டிச் சுவரின்மேலேறி நின்று கொண்டு, "எண்டீ! கோதாவரீ! கோதாவரீ! மணி 5 அடிக்கப் போகிறதே. இன்னும் எண்ணெய் தேய்க்கவில்லையே! என் இத்தனை தாமதம்? சுறுசுறுப்பாய் தலைதீபாவளிப் பண்டிகை ஆகவேண்

டாமோ? எல்லாரும் தூங்கிப்போய்விட்டீர்களா என்ன ?'' என்று மெனக்கெட்டுக்கேட்டாள்.

இதற்கு என்ன பதில் சொல்வாள் பாவம்! காதில் விழாதவள் போலும் அதிக வேலையாயிருப்பவள்போலும் பாவனை காட்டிக் கொண்டே போய்விட்டாள். இவர்களை இன்னும் சோதிப்பது போல் இவர்கள் ஏற்கெனவே பேசியிருந்த நல்ல நாகஸ்வரக்காரன் "மேனுகோவய்யா மேனுகோ ராமா" என்ற உதயராகப்பாட்டை வாசிக்கத் தொடங்கிவிட்டான்.

இவர்களுக்குள்ள வேதனையில் இந்த மேளக்காரனின் சப்தம் பின்னும் ஆயிரம் மடங்காக ஆத்திரத்தைக் கிளறியது. சிள்ளென்று சீறி விழுந்தபடியே "நிறுத்தப்பா! டமால் டிமால் என்று மண்டையை உடைக்கிறாய். நாங்கள் சொல்லும்போது வாசிக்கலாம். பேசாமலிரு. வீட்டில் ப்ரஸவித்திருப்பதால், அவளுக்குத் தலைவேதனையாயிருக்கும்" என்று அதட்டியதில் அப்படியே பயந்து போய் நிறுத்திவிட்டான்.

மணியோ ஏறிக்கொண்டு வருகிறது. உதயம் ஆகும் நேரமாகிவிட்டது. 'மதுசூதனன் எங்கே போய்விட்டானோ தெரியவில்லையே!' என்று திருவேங்கடமும், ராஜம்மாளும் தவியாய்த் தவிக்கிறார்கள். சீர்வகைகளும், பக்ஷணங்களும், வரும்படியும் தங்களுக்கில்லாது போய்விடுமோ! என்று நினைக்கும்போது லக்ஷ்மிக்கும், ராஜம்மாளுக்கும் கண்ணீர்கூட வந்துவிட்டது.

திடீரென்று மாப்பிள்ளையைக் காணவில்லை என்றால் எப்படித் தானிருக்காது? மதுசூதனின் மாமனார் தவிக்கிறார் பாவம்! தற்செயலாக அவர் மேஜைமீது பார்க்கும்போது ஒட்டிய புதுக்கவர் ஒன்றிருப்பதைக்கண்டதும் அது மாப்பிள்ளையின் கையெழுத்து என்பதை யறிந்து திடுக்கிட்டார். அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உடனே கதவைச் சாத்திக்கொண்டு கவரை உடைத்துக் கடிதத்தைப் படிக்கவாரம்பித்தார்.

"ஓய்! மாமனாரே! உமது கஜபாதங்களுக்கு பதினாயிரங்கோடி நமஸ்காரம். கடவுளே என்று நான் என் காலத்தை ஆனந்தமாகக் கடத்திக்கொண்டு வந்தேன். என்னுடைய தூய வாழ்க்கையில் ஒரு குடம் விஷத்தைக் கலந்ததுபோலும், தலைக்குக் கொள்ளி விலைக்குவாங்கியது போலும் எனக்குக் கல்யாணம் என்கிற கொடிய பெய

ரால் என் பெற்றோர்கள் என்னைப் பாழ்படுத்திவிட்டார்கள். அதற்கு முக்கிய கர்த்தாவாய்—சத்ருவாய்—நீர் ஏற்பட்டீர்.

சினிமா பார்ப்பதால் கெட்டுவிடுவார்களென்றும், அதனுல்தான் நீர் உமது மக்களை அனுப்புவதில்லை என்றும் நேற்றுக் காவேரிக் கரையில் வீராப்புபேசினீரே! சினிமாவுக்கு ஒரு வேளை அனுப்பியிருந்தாலும் அம்மாதிரி தீய காக்ஷிகளைப் பார்த்து ஒரு விதமான பயமும், பின்னுல் அதற்கு ஏற்படும் கொடிய தண்டனையைக் கண்டு திகிலும் ஒரு சிறிது உண்டாகி இருந்தாலும் இருக்கும். அதொன்றுமில்லாததால் குசாலாகத் தீக்குழியில் விழத் தைரியம் பிறந்துவிட்டது.

மாமனுரே! நான் சினிமாவில் விகாரக் காக்ஷியைக் கண்டதாகச் சொல்லியது சினிமாத்திரையிலில்லை. உமது வீட்டில், உமது அருமையான மூத்த மருமகப்பிள்ளையும், உமது இளைய குமாரத்தி ஸௌபாக்கியவதியான குமுதவல்லியும் வெகு அன்யோன்யமான தம்பதிகளைவிட அதிகமான இன்பத்துடன் குலாவி மகிழ்ந்த காக்ஷி இன்னும் என் கண்முன்பு தோன்றி என்னை எரிக்கின்றது. இம்மாதிரியான ஊழல் குப்பைக் குடும்பமாக விருப்பதால்தான், ஒரு படிப்பும் இல்லாத எனக்கு—ஆஸ்தியோ, அந்தஸ்தோ இல்லாத எனக்கு ஆயிரக் கணக்கில் பணத்தைக் கொடுத்து மகளையும் கொடுத்தீர் போலும்.

அதுமட்டும் இல்லை. உமது இளைய மகளும் மூத்த மருமகனும் பேசிக்கொண்ட ஒரு வார்த்தை என்னிதயத்தைப்பற்றித் துளைத்தது. அதாவது,—"குமுதா! நான் சொல்கிறபடி அந்த அசட்டு அம்மாஞ்சியிடம் ஏதோ பேசி நைஸாகச் சற்று நேரம் இருந்துவிட்டு வந்துவிடு. பிறகு உன் கர்ப்பத்தின் அதிகாரி அந்த அஸமஞ்சமே ஆகிவிடும். பழியில்லை. ஒரு வார்த்தைக்கும் இடமில்லை. ஆகையால் ராத்திரி தட்டாதுபோய்பேசு"...என்றுசொல்லியதைக் கேட்கும்போது என் மனம் எப்படிக் கொதித்திருக்கும்? என் இதயம் எவ்வாறு துடித்திருக்கும்?

ஓய் மாமனாரே! அயோக்ய ராஸ்கலாகிய உமது பெரிய மருமகப்பிள்ளையைப்போன்ற சோதா ஒருவன் உமக்குக் கிடைக்காது, அந்த அனுசரப் பிண்டத்திற்கு நானா காத்திருந்தேன்?... இருக்கட்டும்.... அந்த சோதாத் தடியன் நினைக்கிறபடி நான் அத்தனை முட்டாளுமல்ல. பழிக்குப் பாத்திரமாகியாவது மனைவியையும், மகளையும் வைத்துக் குலாவும் பேமானியுமல்ல என்பது ஞாபகமிருக்கட்டும். இந்த நிமிஷத்துடன் உமக்கும் எனக்கும் ஸ்னானப்ராப்திகூட இல்லை என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாதிரி பெண்களைப்பெற்று மானங்கெட்ட வழியில் வாழவைத்துக் கண்டுகளிக்கும் உமது ஜென்மம் ஒரு மனித ஜென்மமா! ஒரு பொட்டு விஷத்தைக் கலக்கிக் குடும்பத்தினருக்கும் கொடுத்து நீரும் குடித்து ஆனந்தமாகக் கண்ணை மூடிக்கொள்ளலாம். நானாகவிருந்தால் இம்மாதிரி விபரீதத்திற்கும் இடங்கொடுக்கமாட்டேன். அப்படி என்னையறியாத வகையில் ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்துவிட்டால் உமக்குச் சொல்லியபடியே செய்து பேரானந்த மடைவேன் தெரியுமா!

உமது சம்மந்தத்தின் பலன் போதும். வரதக்ஷிணை என்றும், சீர் வகைகள் என்றும் அலறித் துடித்துப் பேயாய்ப் பறந்த என் பெற்றோர்களை பொழுது விடிந்ததும் அனுப்பிவிடும். இனியுள்ள பெண்களையாவது சீராய் ஒழுங்காய் வளர்த்து மக்களைப் பெற்றப் பயனை அடையும். என்னைப்பற்றிக் கவலைவேண்டாம். என் சவத்தையும் நீங்கள் எதிர்பார்க்கவேண்டாம்.

இங்ஙனம்,
மதுசூதனன்"

அதோடுகூட விருந்த கடிதத்திலிருப்பதாவது :—

"அம்மா! பரதேவதே! உனது காதலன் உனக்கு ஹிதோபதேசம் செய்தபடி நீ வரும் வரையில் காத்திருந்து பழியை ஏற்கும் பழிகாரன் நானல்ல. மகத்தான பாதகத்தைச் சற்றும் பயமின்றித் துணிந்து செய்து பெரும்பாறையைப் போன்று சுமந்துவிட்டாய். அதற்கு

அடுத்தபடியான கொலையும் (சிசுஹத்தி)செய்யத்துணிந்து விடாதே! கொலைக்கும் அஞ்சாத கள்ளியான நீ உன் இஷ்டப்படியே உன் சகோதரியின் புருஷனையே மணந்து சுகமாக விருக்கலாமே! அதற்கு மட்டும் துணிய வில்லையா!...குல்த்ரோகி! சண்டாளி! உடன்பிறந்த சகோதரியை வஞ்சித்து மித்ரத்ரோகம் செய்த வதை உன்னை விடுமா!...என்னைப் பாழாக்கி வதைக்கும் வதை உன்னை எரிக்காது விட்டுவிடும் என்று இறுமாப்பு கொண்டு துடிக்காதே...எல்லோருக்கும் மேல் பகவான் ஒருவனிருக்கிறான்; அவனிடம் எல்லோரும் அவரவர் செய்த பாபத்திற்குத் தண்டனை அடைந்தே தீரவேண்டும் என்பதை மறக்காதே. பிறருக்கு அபகாரம் செய்துவிட்டாலும் ஒரு வேளை பகவான் மன்னித்துப் பரிகாரம் செய்வான். விபசாரம் செய்து வாழும் கள்ளிகளை ஒருபோதும் அவன் விடமாட்டான். மனிதரிடம் மறைத்து மானங்கெட்டு வாழலாம். அந்த மாயாவதாரனிடம் உன் மர்மத்தை மறைக்கமுடியாது...ஜாக்ரதை"

அந்தக் கடிதங்களைப் படிக்கும்போதே அவருக்கு குபீர் குபீர் என்ற நெருப்பு போன்ற ஆவி காது வழியாயும், மூச்சு வழியாயும் பொங்கி எழுந்தது. தேகமே தீப்பற்றி எரிவதுபோலாகிவிட்டது. வெயர்வை வென்னீர் பிரவாகம்போல் வழிகின்றது...கடிதங்களைப் பலமுறை படித்தார். வயிற்றில் செய்யும் சங்கடத்தைக் கூறத் திறமில்லை. தலை அப்படியே சுழல்கின்றது. மூளை கலங்கிவிடும் போலாகிவிட்டது. என்ன செய்வார் பாவம்! இந்த அநியாயத்தை யாரிடம் தெரிவிப்பது?

உண்மையில் இந்த அக்கிரமம் அவருக்குத் தெரியாது. "மூத்த மருமகன் தேன் குடித்த நரிபோல் பல்லைப் பிளந்துகொண்டு அடிக்கடி இங்கு வருவதன் காரணம் இப்போதல்லவா தெரிகிறது. இந்த அக்கிரமத்தை எவ்விதம் கண்டிப்பது? இது ஆண்மீது குற்றமா! பெண்மீது குற்றமா எவ்வாறு அறிவது?...வயது வந்த பெண்கள் தாராளமாகப் பிற புருஷருடன் சகஜமாய்ப் பழகுவதனால் உண்டாகும் கொடிய விஷமல்லவா! ஐயோ! என் மானமே போய் விட்டதே. என் குலத்திற்குக் கண்ணியமே சிதைந்துவிட்டதே. இதென்ன சோதனை?"....என்று சில நிமிஷ நேரம் தவித்தார். ஒன்

றுமே தோன்றுது குழம்பினுர். தன் மூத்த மருமகனை ஒரே வெட்டாக வெட்டிவிடலாமா என்று எண்ணினுர். இவர் படும் வேதனை யாருக்குத் தெரியும்? வீட்டில் மாப்பிள்ளையைக் காணவில்லையே என்கிற கலவரம் அதிகரித்துவிட்டது.

தலைதீபாவளியாதலால் சம்பாவனையை ஓதிக் கொடுப்பதற்காகப் புரோகிதர் வந்துவிட்டார். "கங்கா ஸ்நானம் ஆயிற்று! மாப்பிள்ளை எங்கே? பெண் எங்கே? சீர்வகைகள் பருப்புத் தேங்காய் எல்லாம் பந்தலுக்கு வரட்டும்" என்று தமது மந்திரத்தை ஒப்பித்தார்.

மதுசூதனனின் மாமனுராகிய மகேச்வரனுக்குக் கோபம் பீறிக் கொண்டுவந்துவிட்டது. ஓட்டமாக கூடத்திற்குவந்து "ஓய்பிரகஸ்பதி! இன்று பண்டிகை இல்லை. எங்க சொந்தக்காரர் இறந்துவிட்டதாக இரவு தந்தி வந்துவிட்டது. எல்லோரும் போய் விடுங்கள்!" என்று கர்ஜித்தார். திடீரென்று இம்மாதிரி கூறியதைக் கேட்ட திருவேங்கடத்திற்கும் மற்றவர்களுக்கும் பெருத்த குழப்பம் உண்டாகிவிட்டது. எற்கெனவே தவிக்கும் தவிப்பால் ஒரு வேளை தந்திதான் வந்ததோ என்று எண்ணி திருவேங்கடம் சம்மந்தியின் முகத்தைப் பார்த்தார். சம்மந்தியின் தலை தானுகவே குனிந்துவிட்டது.

திருவேங்கடத்திற்குப் பலமான சந்தேகமும், பயமும் உண்டாகியதால், "சார்! தந்தியா வந்தது! எங்கே! அந்தத் தந்தியைக் காட்டுங்கள்...அல்லது என் மகன் எதாவது தகவல் தெரிவித்திருக்கிருனு! அதையாவது சொல்லுங்கள்" என்று கேட்டபடியே சம்மந்தியின் கையிலிருந்த கடிதத்தைப் பிடுங்கிப் பிரித்துப்பார்த்தார்.

அம்மாதிரி அவர் பிடுங்கிக் கொள்வாரென்று சற்றும் எதிர் பார்க்கவில்லையாதலால் சமாளிக்கமுடியாது போய்விட்டது. எனினும் கடிதத்தைத் திரும்பிப்பெறத் தானும் முயன்று "இப்படிக் கொடுங்கள். அது உங்களுக்குச் சம்மந்தமில்லை" என்று கூறியபடியே கையிலிருந்து பிடுங்கப்போனுர்.

திருவேங்கடத்திற்கு இது தன் மகனுடைய கையெழுத்து என்று நன்ருகத் தெரிந்துவிட்டதால் ஒருவிதமான பரபரப்பும் திகிலுங்கொண்டு கடிதத்தைக் கொடுக்க மறுத்து, கையை இழுத்துக் கொண்டு அங்கு நிற்காது ஓட்டமாக வீதிக்கே போய்விட்டார்.

இதற்குள் வெளிச்சமும் நன்ருக ஆய்விட்டதால் கடிதத்தைப் படித்துவிட்டார். அவ்வளவுதான் தாமதம். அவருடைய கண்களில் முக்கண்ணமூர்த்தியின் அக்கினிக் கண்ணைவிட அதிக உக்ரமாய்த்

தீப்பொறிகள் பறந்தன. தலைமீது இடிவிழுந்துவிட்டது. "ஐயையோ! பணத்திற்கும் சீருக்கும் ஆசைப்பட்டு மற்ற ஒன்றையும் யோசிக்காமல் பெரும் வினையை விலை கொடுத்து வாங்கிவிட்டோமே! மானத்திற்கு மானம் போயிற்று. மகனுக்கு மகளையும் தோற்று விடுவோமா! ஐயையோ! என்ன செய்வேன்?" என்று குழம்பித் தவித்துத் துடிக்கிறார். இதயம் அப்படியே இரு பிளவாய்ப் பிளந்து போய்விடும்போலாகிவிட்டது. துக்கமும், அவமானமும், ஆத்திரமும் ஒன்று கூடி நெஞ்சில் பெரும் பாறையைப்போல் அழுத்தின.

## 10

துக்கமும், அவமானமும், ஆத்திரமும் ஒன்றுகூடி நெஞ்சில் பெரும் பாறையைப்போல் அழுத்தின. இதயம் அப்படியே இரு பிளவாய்ப் பிளந்துபோய்விடும் போலாகிவிட்டது. பாகீரதியால் பேசக்கூட முடியவில்லை. தலை சுழலுகின்றது. "அப்பா! நீங்களேன் கவலைப்படுகிறீர்கள்? எல்லாம் நான் செய்த கர்மம். என் தலைவிதியால்தான் இத்தகைய ஆபாஸம் நேர்ந்துவிட்டது. உடன்பிறந்த சகோதரியாயிற்றே. எனக்கே துரோகம் செய்யமாட்டாள் என்று நான் நம்பினேன். நம்பிய என்னை நட்டாற்றில் விடுவதற் கொப்பச் செய்துவிட்டாள்.

இதுகாறும் குசாலாக வேலையிலிருந்தவர் இப்போது அனுவச்யமாக லீவு வாங்கிக்கொண்டு இங்கு ஏன் வரவேண்டும்? இதில் ஏதோ ஒரு மர்மமிருக்கிறது என்று நான் கனவிலும் கருதவில்லையேப்பா! என்னைப் பிரியாதிருப்பதற்காகவே கூடவந்தார் என்றல்லவா முதலில் நான் ஏமாந்தேன். இங்கு வந்த பிறகு எனக்கே கொஞ்சங் கொஞ்சமாகத் தெரியவாரம்பித்தது.

என்னிதயம் என்ன துடித்தது தெரியுமா! இந்த ரஸாபாஸமும் அக்ரம ஊழலும் எனக்கு இன்னும் கொஞ்சநாள் முன்பு தெரிந்திருந்தால் அநியாயமாய் மாசற்ற குணமுடைய ஒரு உத்தமனை நாம் வீணாகக் கெடுத்து அவமானத்திற்குள்ளாக்கியிருக்கவேண்டாமல்லவா! என் புருஷனுக்கே அந்தத் துரோகியை மணம் செய்வித்து மானத்தைக் காப்பாற்றி இருப்பேனே! இப்போது என்ன

செய்வது என்றே எனக்குத் தெரியவில்லையே!" என்று பிரஸவித்திருக்கும் பாகீரதி கண்ணீர் வழியக் கூறினள்.

மிகவும் மனமுடைந்துவிட்ட தகப்பனர் குழம்பித் தவித்தவாறு "பாகீரதி! அந்த பிள்ளையாண்டான் எழுதியிருப்பதுபோல் நானும் விஷத்தைக் குடித்துவிட்டு அவளுக்கும் கொடுத்துவிடலாமா என்று தோன்றுகிறது. சம்மந்தியாத்துக்காரர்கள் நடுத்தெருவில் நின்று கன்னுபின்னுவென்று கூச்சலிட்டுத் திட்டிவிட்டுச் சென்றபோது என் மானம் ஆகாசத்தில் பறந்துவிட்டது" என்று கூறும்போது அவர் மனைவி விசனமும் கோபமும் பொங்க அங்கு வந்து மானம் போனதுமட்டும் போதாதே! என் பிராணனும் போய்விட்டால் போதுமே. நான் ஆதியில் முட்டிக்கொண்டதெல்லாம் முட்டாள் தனமாகத் தோன்றியது.

பெரியவர்களாகப் பார்த்து நிச்சயித்துச் செய்த விவாகங்கள் என்று மறையத் தொடங்கியதோ, அன்று முதல் அனேக இடங்களில் கோளாறுகளும், தகராறுகளும், விபரீதங்களும் கூடவே தான் நிகழ்கின்றன. பணக்காரர்களின் வீடானல் மறைந்துவிடுகிறது. ஏழைகள் வீடாயின் நடுத்தெருவுக்கு வந்துவிடுகிறது.

பெண்களுக்கு தக்க வயது வந்துவிட்டபிறகு அக்கா வீட்டிற்கும் தங்கை வீட்டிற்கும் தனியே அனுப்பக்கூடாது என்று முட்டிக்கொண்டேனே கேட்டீர்களா! காற்றும் நெருப்பும் ஒரு பெட்டியிலிருந்தால் அதன் ஜ்வாலையைக் காட்டாதிருக்குமா! பெண்களின் நோக்கமறிந்து படிக்கவைப்பதைப் படிக்கவைத்தும் விவாகம்செய்யவேண்டியதைச் செய்துவைத்தும், அடக்க ஒடுக்கமாகவிருக்கப் பழக்கியும் வந்தால் ஏன் விபரீதம் உண்டாகிறது. என்னதான் நாகரீகமும் நம்பிக்கையும் இருந்தாலுங்கூட புத்தி தெரிந்த பெண்களை இஷ்டம்போல் பழக விடுவது பேராபத்தாகத்தான் முடியும் என்பதில் சந்தேகமே இல்லை. நூற்றுக்குச் சில பெண்கள்கூட வைரம்போன்ற திடசித்தம் உடையவர்கள் கிடைக்கமாட்டார்கள். நாமே இந்தப் பெண்ணைக் குட்டிச்சுவராக வடித்துவிட்டு இனி கண்ணீர் விடுவதில் என்ன பலன்? ஓரடி தூர வைத்தே பழக்கி இருந்தால் நம் குடும்பம் இத்தனை சீர்கேடாகாமலிருக்குமல்லவா! கௌரவமெல்லாம் காற்றில் போய்விட்டதே. மானம் முற்றும் மண்ணில் மறைந்துவிட்டதே. கலப்பாலைக் கறக்கலாம். ஒழக்குப்பாலை ஏற்றமுடியுமா! 'எங்கள் வீட்டில் கன்யாப்

பெண் தூரமாயிற்று! கம்மண்டாட்டி பிள்ளை பெத்தாளா! என்ன நடந்துவிட்டது என்று கட்டுப்போடவேண்டும்?' என்று வெகு காலமா பழமொழி சொல்வதுண்டு. இந்த கலிகாலத்தின் விபரீதத் தில் பழமொழியில் கண்ட இரண்டும் அனேக விடங்களில் பலித்து வருகின்றன. பணக்காரர்களானல் பணத்தின் மணத்தில் மறைத்து விடுகிருர்கள். நமக்கு அக்கேடும் இல்லை. வீட்டிலுள்ள நகை நட்டுகளை விற்று கல்யாணத்தை முடித்தாயிற்று. நமது கதியோ, பழமொழியைவிட ஒரு படிக்கட்டு ஏறி கன்யாப் பெண்ணே பிள்ளை பெறவும் விதி அமைந்துவிட்டது. இந்த எழவு எனக்கு ஒரு சிறி தாவது தெரிந்திருந்தால் நான் இந்த கல்யாண எழவே எடுக்காதிருந் திருப்பேனே! இப்போது என்ன செய்வது, தலைக்காட்டமுடியாது போய்விட்டதே! இனிமேலுள்ள குழந்தைகளின் கதி என்ன வாவது? என்று வயிறெரிந்து கூச்சலிட்டாள்.

இனி யார் கூச்சலிட்டு என்ன செய்துதான் பிரயோஜனம்? முறிந்த பாலையும், உடைந்த பண்டத்தையும் சரியாக்கமுடியுமா! தீபாவளிப் பண்டிகை சின்னபின்னமாய்ச் சிதறிவிட்டது. எல் லோருடைய மனமும் சிதறியது. இத்தனை அல்லகல்லோலத்திற்கும் மூலாதாரமாகிய அந்த ராக்ஷஸியோ, அவளது ஆசைக்காதலனுகிய அரக்கனே வெளியில் தலை காட்டவில்லை. பின்னும் சற்று நேரத் திற்கெல்லாம் அவ்விருவரையும் வீட்டில் காணவில்லை என்கிற விஷயம் காற்றுபோல் ஊர் பூராவும் பரவி வெகு கலவரத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கிவிட்டன.

ஏற்கெனவே தத்தளித்துக்கொண்டிருந்த மூச்சு அப்படியே நின்றுவிடும்போலாகிவிட்டது. “பட்டகாலிலே படும். கெட்டகுடியே கெடும்” என்கிற பழமொழிப்படிக்கு மகேச்ரவன் தன் குடும் பத்தின் கண்ணியம் தூள்தூளாய்ச் சிதறிவிட்ட விசனத்தைத் தாங்காது தற்கொலைக்கும் துணிந்துவிட்டான். ஒரு சிறு தணல் ஊரையே கொளுத்திவிடுவதுபோல் ஒரு துர்க்குணியான பெண் ணின் செய்கையால் குடும்பமே அதோகதியாகும் நிலைமைக்கு வந்துவிட்டதென்ருல் அவர்களின் உள்ளத்துடிப்பு எப்படித்தான் இருக்கும்? எல்லோருடைய இதயமும் அனலிடை மெழுகுபோல் உருகியது. வானமிடிந்து தலையில் விழுந்துவிடக்கூடாதா என்றும் தோன்றியது. இந்த அவமானத்திற்கு விமோசனமேது? இந்த மனக் கவலைக்கு முடிவேது?

# 11

இந்த மனக்கவலைக்கு முடிவேது? இந்த அவமானத்திற்கு விமோசனமேது? வானமிடிந்து தலையில் விழுந்துவிடக் கூடாதா என்றும் தோன்றியது. நடு நிசியில் பைசாசம்போல் இருட்டில் காடும், மேடும், பள்ளமும் தெரியாது போய்க்கொண்டிருந்த மதுசூதனனை அந்நகரத்தில் யாரேனும் பார்த்தால் சிலர் கள்ளன் என்றும், சிலர் பயித்தியம் என்றும், சிலர் மந்திரம் தந்திரம் ஜபிக்கச் செல்லும் சூன்யக்காரன் என்றும், சிலர் முற்றுந் துறந்த ஞானி என்றும் பலவிதமாக நினைப்பார்கள் என்பதில் சந்தேகம் உண்டா!

அதே மனிதனை உண்மைத் திருடன் பார்த்தால் தன்னைப் பிடிக்க வரும் வேவுக்காரனோ என்று நடுங்கிப் பதுங்குவான். அதே மனிதனை உண்மை ரோந்து சேவகன் பார்த்தால் தனக்கொரு கேஸ் கிடைத்தது இவன் கள்ளன்தான் என்று பிடித்துக்கொடுத்து ரிவார்டு வாங்குவதில் முந்துவான். அதே மனிதனை ஒரு உண்மைப் பயித்தியம் பார்த்தால் பல்லிளித்துச் சிரித்துக் கல்லைவிட்டெறியும், அதே மனிதனை உண்மையான மந்திரவாதி பார்த்தால் தனது மந்திரம் பலிக்கிறதா என்று சோதிப்பதற்கு அவனையே உபயோகித்துக்கொள்வான். அதே மனிதனை ஒரு உண்மைத்துறவி கண்டால் நல்ல தைரியமும் சித்த உறுதியும் கொண்ட ஒரு சீடன் கிடைத்துவிட்டதாக எண்ணி உபதேசம் செய்ய ஆரம்பிப்பார். உலகம் பலவிதம் என்பது பொய்யாகுமா!

ஒரே பொருள் ஒருவருக்கு இன்பமாயும் ஒருவருக்குத் துன்பமாயும் ஒரே சமயத்தில் தோன்றலாம். உதாரணமாக, நோயாளிக்கு ஊசி குத்தி நோயைக் குணமாக்கிப் புகழடையும் வகையில் வைத்தியன் இன்பமடைகிறான். நோயாளியோ ஊசி குத்திக்கொள்ளும் பாதை தாங்காது துடிக்கிறான். ஒரே விளக்கு சிறு குழந்தையின் விளையாட்டுக்குப் பேரானந்தமாயிருக்கிறது; அதே விளக்கு சில பெரியோர்களின் தூக்கத்திற்குப் பங்கமாயிருக்கிறது. அதே விளக்கு கள்ளனுக்கு எமனாகவிருக்கிறது. ஒன்று ஆனந்தம், ஒன்று வெறுப்பு, ஒன்று நடுக்கம்.

பூர்ண சந்திரனின் சோபையில் உண்மையான காதல் நிறைந்த தம்பதிகள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். அதே சந்திரனின் சோபை

கள்ளக்காதலர்களுக்கு விரோதியாகவிருக்கிறது. பலகாரத்தின் மதுரமான மணத்தை நுகரும்போது நாக்கில் ஜலம் ஊறுகிறது. அதே மணம் மசக்கைக்காரிகளின் முகத்தைச் சுளிக்கச் செய்கிறது. இதுபோல் வேடிக்கைகள் அனந்தம் இருக்கின்றன.

ஒரு சிறிது பயங்கூடத் தோன்ருது நடக்கும் மதுசூதனன் எந்த திக்கில் செல்கிறேம் என்பது தெரியாது நடந்து களைத்துப் போய் விடியும் நேரம் அப்படியே ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். மனத்தில் செய்யும் சங்கடத்துடன் இரவு கண்விழித்து நடந்த களைப்பினல் வயிற்றைக் கிளறி வாந்திக்கு வந்துவிட்டது. மரத்தடியில் அப்படியே படுத்துவிட்டான்.

நன்ருகப் பொழுது விடிந்து, பக்ஷிஜாலங்களின் ஆனந்த கானத்தின் இனிமை மதுசூதனனின் உள்ளத்தில் பேரானந்தத்தை ஊட்டியது. கூட்டிலிருந்த பறவைகள் எதேச்சாதிகாரமாய்ப் பறந்து சென்று தமக்கும் தம் குஞ்சுகளுக்கும் இரை தேடி வரும் அற்புதக் காக்ஷியைக் காணக் காண மதுசூதனனின் உள்ளத்தில் ஆச்சரியமும் பக்ஷிகளின் அறிவைக் கண்டு ப்ரமிப்பும் எழுந்தன.

"ஆஹா! என்ன ஆனந்தம்! ஆறறிவுபடைத்த மனிதனும் தன் வயிற்றுக்காகவும், தன் மக்களுக்காகவுந்தான் பாடுபடுகிருன். இப்பறவைகளின் கூட்டமும் அதற்குத்தான் பாடுபட்டு ஓடியாடித் திரிந்து ஆகாரத்தைச் சேமித்து வந்து ஊட்டி மகிழ்கின்றன. ஆனல் ஆறறிவு படைத்தவன்—உயர்ந்தவன்; அப்படி இப்படி என்று சொல்லிக்கொள்ளும் மனிதன்—இதே உணவைச் சேமிக்க பல அக்ருத்யங்களைச் செய்தும், அடிமையாய் ஒருவனிடம் கை கட்டி வாய் புதைத்துச் சேவகம் செய்தும், நல்ல வழியில் உழைத்தும் பந்தத்துடன் அலைகிருன்.

புள்ளினங்களோ, சுயேச்சை சுதந்திரம் என்கிற ஆனந்தக் கடலாடியும் பாடியும் இன்புற்றுத் தமது வாழ்க்கையை நடத்துகின்றன. என்ன மகிழ்ச்சி! என்ன குதூகலம்! தன் குஞ்சுகளின் வாயில் தன் வாயால் ஆகாரத்தை ஊட்டும் ஆர்வமென்ன...இத்தனை ச்வதந்திரம் மனிதனுக்கேது? இல்லை. இல்லை...அவன் அடிமை முற்றிலும் அடிமை என்ற கருத்தமைத்து ஓர் இனிய கவியைப் பாடி இன்புற்ருன்.

அக் கவியின் ஸாரமும், அமைப்பும், அழகும் அவனையே ப்ரமிக்கச் செய்தன. இயற்கையின் விநோதங்களைப் பார்த்துக்

கொண்டே இன்புற்றிருக்கையில் கணகணவென்று மணிகளின் ஓசையும், சதங்கையின் ஓசையும் ஒன்றுகூடி எத்தகைய விசனத்தையும், கலக்கத்தையும் ஓட்டும் மந்திர ஒலிபோல் ஆனந்தமாய் சப்தித்தன. அந்த அருமையான சப்தத்திலிருந்தே காலையில் மேய்ச்சலுக்காக சுயேச்சையாக அவிழ்த்துவிடப்பட்ட மாடுகளின் கூட்டம் வருவதை யறிந்ததும் மதுசூதனனின் இதயத்தில் இன்ப ஊற்று சுறந்து ஓர் புத்துணர்ச்சியை அளித்தது. இங்கு அருகில் கிராமங்கள் இருப்பதை அந்த அற்புத ஓசையும், மாடுகளின் கூட்டத்தின் மனோகரக் காக்ஷியும் அறிவித்தன.

மரத்தடியில் உட்கார்ந்திருக்கிறானே யன்றி மனம் சற்று நேரத்திற் கொருதரம் சஞ்சலத்திலாழ்ந்து பலத்த யோசனையில் வீழ்த்துகிறது. ஆதித்தன் அவன் கடமைகளைச் செய்யத் தயாராய் வந்துவிட்டான். புள்ளினங்கள் தங்கள் கடமைகளைச் செய்கின்றன. தொழிலாளி தன் தொழில்களை—கடமைகளை—செய்யக் கிளம்பிவிட்டான்.

ஆதித்தனைக் கண்ட அம்புயம் தன் கடமைப்படி விகசிதமுற்று மணத்தை அள்ளிவீசுகிறது. "உலகமே தன் கடமைகளைச் செய்கையில் நான் மட்டும் எனது கடமையை மறந்து பெற்றோரையும் வளர்த்தோரையும் கலக்கவைத்துவிட்டு உட்கார்ந்திருக்கலாமா?"... என்று கடமையை எண்ணி மனம் அலைகிறது.

இந் நிலைமையில் உழன்றுகொண்டிருக்கையில் மாட்டை ஓட்டிக்கொண்டு வரும் பையன்களும், சிறுமிகளும் மாடுகளைச் சந்தோஷமாக மேயவிட்டுத் தாங்கள் ஒரு மரத்தடியில் உல்லாஸமாக உட்கார்ந்து மனம்போனபடிப் பேசியும் பாடியும் ஆடியும் களங்கமற்று இன்புற்றிருக்கும் காக்ஷி மதுசூதனனின் கற்பனை பார்வையில் பேரின்பத்தைக் கொடுத்தது. அந்த மாட்டுக்காரப் பசங்கள் இடையிடையே, "ட்ரியோ! ட்ரியோ! தே! தே. ஏ! குட்டகொம்புகாளே! ஓடாதே! ஓடாதே!" என்று கூவுவதும் மத்தியில்

காச்சின பாலிருக்க கிஷ்டன் கட்டியா தயிரிருக்க
பேசின பேச்சினிலே கிஷ்டன் எடுத்து குடிச்சிப் புட்டான்
மோருமோரு இண்ணுன் கிஷ்டன் மொக்கரரம் துள்ளிப்பூட்
பாலு பாலு இன்னுன் கிஷ்டன் பறந்து ஓ[illegible]ட்டான்
அண்ணனும் தங்கச்சியும் நாங்க ஆற[illegible]துப் போகச்சிலே
அங்கே ஒளிஞ்சு அந்த கிஷ்டன் அடிச்சி துரத்தி வந்தான்



183644

வெண்ணெ எங்கே இன்னன் கிஷ்டன் வழியே மறச்சிப் பூட்டான்

வெண்ணெயும் பாலுமாய் தந்தோம் வாரி வாரி துண்ணுன்...
என்று பாடி இன்புற்று 'ஹி ஹி ஹி ஹி...கண்ணனுக்குத்தானே வெண்ணெ குடுத்தே எனக்கு' என்று ஒருவருக்கொருவர் கேட்டுச் சிரிப்பதும் மதுசூதனனின் மனப்புண்ணை ஆற்றும் மருந்துபோல் தோன்றியது. அந்த மாட்டுக்காரப் பசங்கள் பின்னும் பாடத் தொடங்கி,

காட்டிலே மாட்டையோட்டி ஹரிஹரி
மாட்டையோட்டி ஹரிஹரி
காலாற மேயவிட்டு ஹரிஹரி
ஓடிவிளையாடி ஹரிஹரி விளையாடி ஹரிஹரி
உல்லாஸமா யிருப்போம் ஹரிஹரி
மாட்டைக் கழுவிடுவோம் ஹரிஹரி கழுவிடுவோம் ஹரிஹரி
வாட்டமாய் நாம் குளிப்போம் ஹரிஹரி
கந்தையைக் கசக்கிக்கட்டி ஹரிஹரி கசக்கிக்கட்டி ஹரிஹரி
கடவுளுக்கு கும்பிடுவோம் ஹரிஹரி
பசி எடுக்கும் வேளையிலே ஹரிஹரி வேளையிலே ஹரிஹரி
பக்குவமாய் கூழு வரும் ஹரிஹரி
வயிருரக் குடிச்சுபுட்டு ஹரிஹரி குடிச்சுப்புட்டு ஹரிஹரி
வாயாறப் பாடிடலாம் ஹரிஹரி
மந்தாரப் பொழுதினிலே ஹரிஹரி பொழுதினிலே ஹரிஹரி
மாட்டையோட்டி வீடு செல்வோம் ஹரிஹரி
செம்மையாக பால் கறந்து ஹரிஹரி பால்கறந்து ஹரிஹரி
அம்மாளிடம் கொடுத்திடுவோம் ஹரிஹரி.

என்று பாடிப் பின் "டேய்! அதுக்குமேலே வேலேயே இல்லே. அப்றம் நல்லா சுத்தலாம். ஓடலாம். ஆடலாம். கண்ணுமூச்சி விளையாடலாம். கோயில் சுத்தலாம். அல்லாஞ் செய்யலாம்!" என்று தமது சுதந்திரத்தை எதிர்பார்த்து அதில் ஓர் இனிமையைக் கண்டுப் பேசினர்கள்.

மதுசூதனனுக்கு உள்ளக் கிளர்ச்சி கூறத்திறமில்லை. ஒரு மாட்டுக்காரப் பையன் தனக்குள்ள கடமை பூராவும் ஆனந்தமாய்ப் பாடிவிட்டு விடுதலையை எதிர்பார்க்கிருன். பறவைக் கூட்டத்திற்குள்ள சுதந்திரம் மனிதக் கூட்டத்திற்கேது? பந்தத்தில் உழன்ற

பின் விடுதலையைக் கோருகிறன். எனினும் அவனுடைய பந்தம் நிர்ப்பந்தமில்லை. சுதந்திரத்துடன் கூடிய பந்தமாகவே இருக்கிறது. அந்த கள்மஷமற்றக் குழந்தைகளின் கூட்டத்தில் நாமும் போய்க் கலந்துகொள்ளலாம்" என்று எண்ணியவனாய் எழுந்து அந்தக் கூட்டத்தின்முன்பு வந்து 'தம்பீ ! இதென்ன ஊரு ?' என்று கேட்டான்.

மாடு மேய்க்கிற பிள்ளைகளானாலும் வம்புக்கும், கர்வத்திற்கும் தோற்றவர்களில்லை..."என் சாமீ! ஊரு பேரு தெரியாதெயா ஊருலே வந்து குந்திகிட்டிருக்கறே! எங்க ஊருத்தான் இது" என்று கிண்டலாகக் கூறினர்கள்.

இவர்களின் விளையாட்டுப் பேச்சு மதுசூதனனுக்குக் கோபத்தை உண்டாக்காது சந்தோஷத்தையே கொடுத்தது. "தம்பீ! நான் வழிப்போக்கன்தானே. தினம் ஊர் சுற்றுகிறவனுக்கு எப்படி ஊரின் பெயர் தெரியும்? அதனுல் தான் கேட்டேன்" என்றான்.

மாட்டுக்காரப்பசங்கள் :—ஏஞ்சாமீ! எங்கபக்கத்து கிராமத்துலே வந்திருக்கிற சாமியாரேப்பேல நீயும் ஊர் சுத்தர சாமியாரா! ஓன் தலே மொட்டையே காணமே....

மதுசூத :—ஓகோ! ஒங்கபக்கத்து ஊரில் யாராவது சாமியார் வந்திருக்கிறரா அவர் என்ன செய்கிறர்?

மாட் :—எங்களுக்கென்ன தெரியும் சாமி! எப்பப்பார்த்தாலும் தாளத்தை தட்டிகிணு பாட்ருங்க. குதிக்கருங்க. சாமிக்கு என்னமோ உக்ஷவம் பண்ருங்களாம். தெனம் அல்லாரிக்கிம் சாப்பாடு வெக்கருங்களாம்.

இதைக் கேட்டதும் மதுசூதனனின் மனத்தில் ஒரு புதிய உணர்ச்சியும் சக்தியும் பிறந்தன. "நாம் ஏன் அந்த சாமியாருடன் சேர்ந்து பகவானைப் பஜிக்கக்கூடாது? பாழாப்போன ஊருக்கு ஏன் திரும்பிப் போகவேண்டும்? கொஞ்ச நாளைக்காவது இந்த அவமானத்தை மறக்கும் பொருட்டு நிம்மதியாயிருக்கலாமே!" என்று ஆசை உண்டாகும்போது சற்று முன்பு நினைத்தக் கடமையை அடியோடு மறந்துவிட்டான்.

உடனே அந்த பிள்ளைகளை நோக்கி "அம்பீ! அந்த இடத்தை எனக்குக் காட்டுகிறயா! உனக்குக் காசு கொடுக்கிறேன்" என்றன். காசு என்றல் யாருக்குத் தான் ஆசைப் பிறக்காது? உடனே ஒரு பையன் தன் மாடுகளை மற்றவனிடம் பார்த்துக்கொள்ளும்படிக் கூறிவிட்டுத் தான் புறப்பட்டான்.

எத்தகைய வேதனை இருப்பவர்களுக்கும் ஒரு புதிய உணர்ச்சியும் ஆசையும் உண்டானல் தனி சக்தியும் தெம்பும் உடனே பிறப்பது சகஜமல்லவா! அங்குள்ள குளத்தில் ஸ்நானம் செய்து ஈரத் துணியுடனேயே குளத்து ஜலத்தை இரண்டு வாய்க் குடித்துவிட்டு நடக்கலானுன்.

அந்த ஊரின் தெருக்கோடியில் போகும்போதே நல்ல அழகான தம்புராவின் நாதம் கணீர் கணீர் என்று சப்திக்க, தாளத்தின் ஓசை ஜம்மென்று கேட்க ஆனந்தமாய்ப் பாடும் நாதம் கேட்டதும் மதுசூதனனின் தேகம் ஆனந்தப் பரவசமாகி மயிர்க்கூச்செறிந்தது. சொர்க்கப் பதவியைக் கண்டதுபோல் ஒரு நூதன உணர்ச்சியுண்டாகி சுகஸ்வரூபியாகச் செய்தது. எங்கும் இன்பமயமாய்த் தோன்றியது.

## 12

எங்கும் இன்ப மயமாய்த் தோன்றியது. சொர்க்கப் பதவியைக் கண்டதுபோல் ஒரு நூதன உணர்ச்சி யுண்டாகி சுகஸ்வரூபியாகச் செய்தது. ஆனந்தப் பரவசமாகி மயிர்க்கூச்செறிந்தது. "ஹா! ஹா! ஹா! ஹா!...என்ன ஆனந்தம்! என்ன கானம்! என்ன பக்தி! என்ன பரவசம்!" என்று ஜனங்களெல்லோரும் வாய்விட்டுக் கூறி ஆனந்த பாஷ்பம் வழியக் கூத்தாடுகிருர்கள்.

ஹரேமுராரே! மதுகைடபாரே! கோவர்த்தன கிரிதாரீ!
ராதே கோவிந்தபஜே! ப்ருந்தாவன சந்திரபஜே!
கோபீரமண! பாபஹரண! பக்தாநுகூலசரண!
ராதே கோவிந்தபஜே! ப்ருந்தாவன சந்திரபஜே. (ஹ)

என்ற நாமாவளியை அங்கு கைகுவித்து மெய்மறந்து மயிர்ச் சிலிர்க்க ஆனந்தக் கண்ணீர் பெருக நடுநாயகமாக நிற்கும் ஸ்வாமிகள் முதல் பாடுவதும், மற்றையோர்கள் அதை சந்தை பாடுவதுமாக பஜனை நடக்கும் ஆனந்தக் காக்ஷியைப் பார்த்தாலன்றோ அதன் பிரம்மானந்தம் தெரியும்.

அச்சமயம் தன்னை மறந்து வெறி பிடித்தவன்போல் வந்த மதுசூதனன் கோஷ்டியில் வந்து சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்காரம்

செய்து அஞ்சலிபத்தனுய் நின்று, தானும் அந்த கோஷ்டியுடன் சேர்ந்து பாடினுன். யார் யாருக்கு எதெது ப்ரியமோ அதது கிடைத்துவிட்டால் அவர்களின் சந்தோஷத்தைக் கூறவேண்டுமா!

நாமாவளி முடிந்ததும் ச்வாமிகள் வழக்கம்போல் பக்தர்களைப் பாடச்சொன்னுர். சிலர் பாடினுர்கள். மதுசூதனன் தானுகவே ஒரு பாட்டுப்பாட உத்திரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டான். ச்வாமிகளும் அப்படியே கொடுத்ததும், பாடத் தொடங்கினுன்.

மோகன ராகம்.

பல்லவி

கர்வம் கொள்ளாதே நெஞ்சமே! உன்னைக்
கவிழ்த்திடும் மோகத்தில் மயங்கி அறிவழிந்து (க)

அனுபல்லவி

சர்வமும் அவனென்று சரணம் புகுந்துனது
கர்மவினை துலைத்து தர்மத்தி லொழுகிடு (க)

சரணம்

பெண்டுபிள்ளைகளென்றும் பண்டு பலாதிஎன்றும்
கண்ட பொருளிலாசை கொண்டு தவித்துப் பாவப்
பிண்டமாய் உலகினில் உண்டு வளர்த லொன்றே
கண்ட ஆனந்த மென்று மண்டை திமிர்படைத்து (க)
நல்லறமும் பணியும் சொல்லுமுன் செய்திடு
அல்லும் பகலும் நாமம் சொல்லி மகிழ்ந்திடு
துல்லிய மனத்திற்கோர் எல்லையை வகுத்திடு
அல்லிநகர் வேதவல்லியைப் போற்றிடு (க)

என்ற பாடலை அந்த பாவம் ததும்ப மெய்மறந்துப் பாடியதைக்கேட்ட சபையோர் தம்மை மறந்து கரகோஷம் செய்தார்கள். ச்வாமிகளும் மதுசூதனனை ஓயாது பார்த்துத் தமக்குள் மகிழ்ந்தார். பிறகு கற்பூரஹாரத்தியும் நிவேதனமும், வினியோகமும் முறையே நடந்தன. கூட்டமும் கலைந்தது. இத்தனை பெரிய உத்ஸவத்திற்குக் காரணம் தீபாவளிப் பண்டிகையும் சேர்ந்தது.

ஸ்வாமிகளுடன் இருக்கும் சிஷ்யர்களைத் தவிர மற்றையோர் போய்விட்டார்கள். மதுசூதனன் மட்டும் தயங்கித் தயங்கி நின்றுன். சிஷ்யர்களில் ஒருவன் வந்து "யாரப்பா! என்ன சமாச்சாரம்?" என்று கேட்டான்.

மது :—ஸ்வாமிகளிடம் உபதேசம் பெறக்காத்திருக்கிறேன். நான் ஒரு பித்தன். பஜனுமிருதம் பருகுவதில் பெரும் பயித்தியம் கொண்டவன். தக்க குருவின் உபதேசமில்லாது தவித்தேன். ச்வாமிகளிடம் சொல்லி என்னை அடியார் கோஷ்டியில் ஆட்கொள்ளச்செய்ய வேண்டும்—என்ருன்.

பிறகு சிஷ்யன் இவனை அழைத்துச் சென்று ஸ்வாமியின் முன்பு நிறுத்தினன். மதுசூதனன் ஸ்வாமிகளின் இரு பாதங்களையும் பிடித்துக்கொண்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான். பக்திப் பெருக்கால் நாக்கு தழதழத்தது. மெல்ல சமாளித்துக்கொண்டு "ஸ்வாமீ! இவ்வேழையை அங்கீகரித்து இவ்வடியனின் மனோரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்" என்று கூறி அஞ்சலிபத்தனுய் நின்ருன்.

சாந்தமே உருக்கொண்ட ஸ்வாமிகள், புன்னகையுடன் பேசத் தொடங்கி "அப்பா! சற்று முன் பாடியது நீதானே! அப்பாடலை உனக்கு யார் கற்றுக்கொடுத்தது?" என்று ஒருவிதமான வாஞ்சையுடன் கேட்டார்.

அபாரமான பணிவும், பயபக்தியும் கொண்ட மதுசூதனன், "அடியேன் தான் பாடியது.... தங்களுடைய அனுக்ரகத்தினுலும், வாணியின் ஒரு சிறிய கடாக்ஷத்தினுலும் அப்பாடலை இந்த ஏழையே பாடியதுதான். ஒருவரும் கற்றுக்கொடுக்கவில்லை" என்ருன்.

ச்வாமி :—மெத்த சந்தோஷம். உனக்குக் கவிபாடுவதிலும் பயிற்சி யிருப்பதைக்காண உண்மையில் நான் உள்ளமகிழ்ச்சியடைகிறேன். கவியின் நடை வெகு சரளமானதும், பாவம் நிறைந்ததுமாயிருக்கிறது. இதுபோல் நீ இன்னும் பாடியிருக்கிருயா! உன் கவியைவிட உனது சங்கீதத் திறமை இன்னும் அபாரமாய் ப்ரகாசிக்கிறது. உன் சாரீரத்தின் அழகிலும் சங்கீதம் பாடும் அழகிலும் நான் லயித்துப்போய்விட்டேன். நீ எங்கு வந்தாய்? உன் ஊர் எது? உற்ருர் பெற்ருர் எங்கே! கல்யாணமாகிவிட்டதா! உன் வரலாறு என்ன! நீ படித்திருக்கிருயா! உன் விருப்பம் யாது?" என்று பல கேள்விகளை ஒரேயடியாய் அளந்தார்.

மது :—(சந்தோஷமும் பணிவுங்கொண்டு பேசத்தொடங்கி) ஐயனே! எனது இத்தனை சிறு பிராயத்திலேயே என் வரலாறு ஒரு நாடகம்போலாகிவிட்டது. எனக்கு பெற்ருேரும், உற்ருேரும், மற்ருேரும் நிறைந்திருப்பினும் யாவும் ஆண்டவன் ஒருவனே என்று

தான் நான் நம்பியிருக்கிறேன். விவாக மென்கிற விலங்கைப் பூட்டினார்கள். ஆனால் அவ்விலங்கை, மனைவி என்கிற கொடிய விலங்கை முறித்தெறிந்து விட்டாள். ஆபாஸக் களஞ்சியத்தைப் பெண்டாயடைந்த மகாபாவியின் மனம் முறிந்தது. (நடந்த விஷயத்தைக் கூறி) உடைந்த இதயத்துடன் சொல்லாமல் வந்துவிட்டேன். குழம்பிய சேற்றைப் போலுள்ள என் மனத்திற்கு ஓர் ஆறுதலும் தெளிவும் அளிக்கும் குருவாகவிருந்து தாங்கள் உபதேசம் செய்யவேண்டும். எனக்கு மீண்டும் ஊருக்குப் போக மனமில்லை. என்னை க்ஷமித்து என் கோரிக்கையை நிறைவேற்றப் பிரார்த்திக்கிறேன்.—என்று துக்கத்துடன் கூறினான்.

ஸ்வாமி :—இவ்வுலகம் ஓர் விசித்திரமானது என்பது உனக்குத் தெரியாதா! உன் வாழ்க்கையில் மட்டுந்தான் இத்தகைய பூகம்பம் என்று நினைக்கிறாயா! ஒவ்வொருவருடைய வாழ்க்கையில் ஒவ்வொரு விசித்திரம் இருந்தே தீரும். ஒவ்வொன்று ஒவ்வொரு விதமாகவும் தனித்தனி உணர்ச்சியுள்ளதாயும் இருக்கும். இதற்காக நீ அந்த துஷ்ட நாயை வெறுக்கலாமேயன்றி உன் பெற்றோரையும், மற்றோரையும் துறப்பது தர்மமா! அது மகாபாவமல்லவா! அவர்களை சவரக்ஷிப்பது உன் கடமையல்லவா! கடமையை மறத்தல் மனித தர்மத்திற்கு சற்றும் அடாதே. இளங்கன்று பயமறியாது என்பதுபோல் நீ அந்த வேகத்தில் வந்துவிட்டாய். இந்த வைராக்யம் என்றும் நிலைத்திருக்குமா?

மது :—ஐயனே! நிலைத்திருக்கவேண்டுமென்பதுதான் என் பிறவி ப்ரார்த்தனை. அது நிலைக்கவே தம்மை அண்டுகிறேன். தமது உபதேசமும், தமது சகவாஸமுமே எனது வாழ்க்கையின் ஆணிவேராகும். தாங்கள் மறுக்கக்கூடாது.

ஸ்வாமி :—அப்பா! மாயையை ஜெயித்துவிட்டதாக நீ நினைக்கிறாயா! ஆசைப் பசையிலிருந்து விடுபட்டுவிட்டதாக உன் நினைப்பா!...நீ ஜிதேந்திரியனென்று இப்போதே நினைத்துவிட்டாயா! நீ அவைகளை விலக்கவும், நினையாதிருக்கவும் நினைக்கலாம்; ஆனால் அவை உன்னை விடவே விடாது. தம்வயப்படுத்தி ஆட்டித்தான் தீரும். இந்த தத்துவத்தைத் தான் நீ முதலில் அறிந்துகொள்ள வேண்டும். முதலிலேயே விரக்தி மார்க்கத்திலிறங்குவது பெரும்பாலும் தோல்விதான் அடைகிறது. ஆகையால் நீ குழந்தை புத்தியை மாற்றிக்கொண்டு உன் பெற்றோரிடம் போய்ச்சேரப்பா!

அவர்களை இன்புறச் செய்வதுதான் மகனின் முதற் கடமையாகும்.

மது :—ஸ்வாமீ ! என் மனம் தத்தளிக்கின்றது. அவர்களிடம் சென்றால் ஏதேனும் தந்திரம் செய்து அந்த மனைவியின் ஊழலை மறைத்து அப்பாவப் பிண்டத்தை என் தலையில் சுமத்தப் பார்ப்பார்கள். அல்லது இன்னொரு விலங்கை மாட்டுவார்கள். எனக்கு அவ்விரண்டும் பிடிக்கவில்லை. என் மனத்திற்கு உகந்த மார்க்கம் இதுதான். என்னை அங்கீகரிக்கவேண்டும்.

ஸ்வாமி :—அப்பா ! அப்படியானால் நீ விவாகமே செய்து கொள்ளாது சன்யாசியாயிருக்கப்போகிறாயா ? ஒரு தாரத்திற்குப் பலதாரம் கேட்கிறேன். அவாவை அறுத்தவன் என்று உன்னை நீயே நம்புகிறாயா ! 'மாயை உன்னை அசைக்க முடியாதல்லவா ?... உன்னைப் பரீக்ஷிக்கலாமா ?' என்று கேட்கும்போது ஒருமாதிரி பயமும், குழப்பமும் உண்டாகிவிட்டன.

பரீக்ஷை வைத்தால் தோற்றுவிடுவோமோ ! என்ற கிளர்ச்சி ஒன்று உதயமாகியது. பதில் சொல்லமுடியவில்லை. சிறிது நேரம் கலக்கமுற்றான். பிறகு பேசத்தொடங்கி, "ஐயனே ! என்னை நான் துறவி என்றோ, த்யாகி என்றோ நினைக்கவில்லை. ஆனால் துறவியாயும், த்யாகியாயும், ஆவதற்கு பரிபூர்ணமாக ஆசைப்படுகிறேன். தங்களுடைய கடின பரீக்ஷையில் ஜெயித்தால் என்னைத் தமது சிஷ்ய கோஷ்டியில் ஏற்றுக்கொள்ளுங்கள். தோற்றால் அதற்கான தண்டனையை அடையத் தயாராயிருக்கிறேன். எப்படியும் நான் இப்போது தங்களை விட்டுப்போகவே மாட்டேன். சில மாதங்களாவது தங்களுடன் இருந்துதான் செல்வேன். என்னை அங்கீகரிக்கவேண்டும்" என்று கெஞ்சினான்.

அதற்குமேல் ஸ்வாமிகள் தர்க்கம் செய்யாமல் "சரி...உன் பெயரென்ன ?...உன்னை உன் பெற்றோரிடம் அனுப்புவதுதான் என் கடமை. அவர்கள் உன்னைத் தேடி ஒருகால் வருவார்களானால் நீ கட்டாயம் போய்விடவேண்டும். உன் மனது மிகவும் வேகத்திலிருப்பதால் இப்போது சில தினங்களிருப்பதில் ஆக்ஷேபனை இல்லை...ஆனால் மாயையை மட்டும் நீ ஜெயித்தவனாகக் கர்வம் கொள்ளாதே. அதை ஜெயிப்பதும் அக்னியாற்றைக் கடப்பதும் ஒன்று. இந்த மானிட ரகஸியத்தை முதலில் தெரிந்துகொள்ளு" என்று உபதேசித்தார்.

மதுசூதனனின் சந்தோஷம் உச்சத்தை எட்டியது. ஸ்வாமிகளை

மறுபடியும் வணங்கினன். அன்று முதல் தவருது பக்தியுடன் சேவை செய்வதும், பஜனை செய்வதும், ஆனந்தமாகப் பாடுவதும், அவருடன் ஊர் சுற்றுவதுமான சந்தோஷ வாழ்க்கையிலீடுபட்டான். சிறுகச் சிறுக அவன் துக்கம் மறைந்தது. உள்ளத்தில் ஆனந்தம் நிறைந்தது. பேரின்பத்தில் மிதப்பதுபோலாயிற்று.

## 13

பேரின்பத்தில் மிதப்பதுபோலாயிற்று. உள்ளத்தில் ஆனந்தம் நிறைந்தது. சிறுகச் சிறுக அவன் சந்தோஷம் அதிகரித்தது. தனக்குத் தடங்கலாயும் சனியன் போலும் இருந்த மைத்துனன் யாதொரு தகவலும் இல்லாது மறைந்துவிட்டதால் கிட்டுவின் பாடு குசாலாயிற்று. லக்ஷ்மியின் சந்தோஷம் கணவனுடன் போட்டியிட்டது.

ஏற்கெனவே தகப்பனுருக்குள்ள சொத்துக்களுடன் கல்யாண சீர்வகைகளும் தனக்கே சேர்ந்துவிட்டது என்று அளப்பரிய சந்தோஷம் உண்டாகியது. இவர்களுடைய சந்தோஷத்திற்கு நேர் எதிராக திருவேங்கடத்தின் துக்கமும், ஏக்கமும், தவிப்பும் கூறத் திறமே இல்லை. அவமானமும் ஆத்திரமும் பொங்க அன்று வந்துவிட்ட பிறகு, மகனைத் தேடும் ப்ரயத்தனத்தில் அவர் பட்ட ச்ரமமெல்லாம் வீணுயிற்று.

இருக்குமிடமே தெரியாது மாதங்கள் காற்றினும் கடிய வேகத்துடன் பறந்து செல்கின்றன. மதுசூதனனின் புகைப்படத்தை பத்திரிகையில் போட்டுப் பார்த்தால் ஒரு வேளை எங்கேனும் இருந்தால் யாராவது கண்டுபிடித்துச் சொல்லமுடியும் என்று எல்லோரும் யோசனை கூறினர்கள். அதற்குப் பரீக்ஷைபோல் ஒரு புகைப் படங்கூடக் கிடையாது. என்ன செய்வது ?

இந்த வேதனை சகிக்காது எங்கேனும் தவறி விழுந்துவிட்டானே! தற்கொலை செய்து கொண்டானே! எங்கேனும் கண் காணுத தேசத்திற்கு ஓடி விட்டானே!" என்று பலவித குழப்பம் உண்டாகிவிட்டது. ஜோஸ்யம், ஆரூடம், குறி, முதலியன கேட்டுப்

பார்த்தார்கள். எதிலும் பலனில்லை.

மதுசூதனனின் பெற்றோர்கள், வேண்டுமென்றே தன் மகனைக் கொன்றுவிட்டதாக ஓர் பழியைச் சுமத்தி திருவேங்கடத்தையும் ராஜத்தையும் சரமாரியாகத் திட்டிப் பெரும்பகையை மூட்டி விரோதக் கொடியை நாட்டிவிட்டார்கள். "இந்த பெரும் அபவாதப் படுகுழியிலிருந்து எம்மை மீட்பாயா! கடவுளே!" என்று இரவு பகல் அழுது அழுது கண்ணும் அவிந்துவிடும்போலாகிவிட்டது.

மதுசூதனனின் பள்ளிக்கூடத்தில் எப்போதோ எடுத்த ஒரு புகைப்படம் கிடைத்தது. அதை ஒரு தக்கச் சித்திரக்காரனிடம் கொடுத்து தற்போது எப்படி இருப்பானோ அப்படியே எழுதச் சொல்லி அதைப் பத்திரிகைகளில் ப்ரசுரித்தார். "ஏதாவது தகவல் கிடைக்குமா? உயிருடன் எங்காவது இருக்கிறான் என்ற நற்செய்தியாவது கிடைத்தால்போதும். போதும்" என்று திருவேங்கடமும், ராஜமும் தவித்துக்கொண்டிருந்தார்கள்.

லக்ஷ்மி தன் பெற்றோர்கள் வருத்தமுற்று அன்னஆகாரமின்றி உடம்பு மெலிந்து வருவதைக்கண்டு கேவலமாக நினைத்து நகைத்தாள். மதுசூதனனின் தகவல் கிடைக்காதிருக்கவேண்டுமென்றும், அவன் திரும்பி வராதிருக்கவேண்டும் என்றும் தம்பதிகள் ப்ரார்த்தனை செய்தார்கள். ஒவ்வொருவருடைய ப்ரார்த்தனை ஒவ்வொரு விதம். எதற்குப் பகவான் கிருபை செய்வாரோ! யார் கண்டார்கள்!

மதுசூதனன் தனக்கொரு சிஷ்யனாக வந்து சேர்ந்ததில் ஸ்வாமிகள் வெகுதிருப்தியும் அவனிடம் ஒருவித மதிப்பும் பிரியமும் கொண்டார்கள். மதுசூதனனின் இனிமையான சங்கீதத்தின் மகிமை அவர்கள் போகும் ஊர்களிலெல்லாம் மக்களைப் பரவசமுறச் செய்தது. மதுசூதனன் சத்காலக்ஷேபத்திலும், பஜனையிலும், சங்கீதத்திலும், ஊர் சுற்றும் ஆனந்தத்திலும் தன்னையே மறந்தான். வீட்டை அடியோடு மறந்தான். தன்னை எந்தவிதமான மாயையும், பந்தமும் அணுகாது, தான் ஸ்வாமியாரிடம் ஜெயித்துவிட்டோம் என்கிற எண்ணங்கூட அவனுக்கு உண்டாகிவிட்டது. அதைப்பற்றிச் சற்று கர்வங்கூட கொள்ளத் தொடங்கினான்.

ஒருநாள் ஆனந்தமாக பஜனை நடந்துகொண்டிருக்கையில் ஆவலே வடிவாய் திருவேங்கடமும் இன்னொருவரும் உள்ளே

வந்தார்கள். கரைகடந்த ஆர்வத்துடன் "எங்கே என் மதுசூதனன்? எங்கே என் கண்மணி?" என்று திருவேங்கடம் பதறியவாறு கேட்டார்.

கூடவந்தவர் திருவேங்கடத்தை அடக்கி சமாதானம்செய்து, "ஐயா! பதறுதீர்கள். அதோ, கூட்டத்தில் சாமியாரின் பக்கத்தில் நின்றுகொண்டு ஆனந்தமாய் பாடுகிறுரே, அவராகத்தான் இருக்க வேண்டுமென்று நினைத்துத்தான் பத்திரிகையில் உமது விளம்பரத்தைப் பார்த்ததும் உமக்குக் கடிதமெழுதினேன். நீர் சற்று நிதானமாக அவர்தானுவென்று பாரும்; பிறகு பேசலாம்: காரியத்தைக் கெடுத்துவிடாதேயும்" என்று ரகஸ்யமாய் கூறினுர்.

திருவேங்கடம் அந்த திக்கை உற்றுக் கவனிக்குமுன்பே மதுசூதனனின் இனிமையான கானத்தைக் கேட்டு உள்ளம் பூரித்தபடியே, "ஹா! என் செல்வன் அவன்தான்! மதுசூதனு! மதுசூதனு!" என்று கட்டுக்குமீறிய அன்புடன் ஆவேசங்கொண்டு ஓடிப்போய் மகனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு 'என் செல்வா! என் வயிற்றில் பாலேவார்த்தாயா!" என்று கூறி, மெய்மறந்து பரவசமுற்றுர்.

இந்த அற்புதமான காக்ஷியைக் கண்டு சபையிலுள்ள எல்லோரும் பிரமித்துவிட்டார்கள். ஸ்வாமிகளுக்கும் சில வினுடிகள் பிரமிப்புண்டாகி விலகியது. மதுசூதனன் மெய்மறந்து பாடிக்கொண்டிருக்கையில் தகப்பனுர் ஓடிவந்து கட்டிக்கொண்டதைக் கண்டதும் அவனுக்கும் ஒருவிதமான அதிர்ச்சியும் அன்பும் உண்டாகி அப்படியே தம்பித்துப்போய் பாடுவதை நிறுத்திவிட்டு, "அப்பா!" என்று சிறு குழந்தையைப்போல் கூவிக்கொண்டே தனது புதிய வைராக்கியத்தை மறந்து, இயற்கையான பாசத்துடன் இறுகத்தழுவிக்கொண்டான். இதைக் கண்ட ஸ்வாமிகள் புன்னகை புரிந்து உள்ளம்பூரித்தார்.

பஜனை அப்படியே நின்றுவிட்டது. திருவேங்கடம் சற்று சமாதானமடைந்து, "மதுசூதனு! என்னைப் பரிதபிக்கச் செய்தது உனக்கு நியாயமா! உலகத்தில் எத்தனையோவிதமான அக்ரமங்கள் நடக்கின்றன. அவரவர்களின் வாழ்க்கையில் எத்தனையோ விபரீதமாகத்தான் தோன்றும். இதற்காக நீ எங்களை வயிறெரியச் செய்துவிட்டு வரலாமா! இது தருமமா! உன் தெய்வபக்திக்குத்தான் இது அடுக்குமா!....ஸ்வாமிகளே! அறியாத சிறுவன் ஓடி வந்துவிட்

டான் என்ருல் நீங்கள் புத்தி சொல்லியனுப்பாமல் இப்படி அடியோடு பயித்தியமாக்கிவிடலாமா! எங்களுக்கிருப்பது இவன் ஒரே மகனுயிற்றே! அதுவும் கையேந்தி ஸ்வீகாரம் வாங்கிய மகனுயிற்றே! இவனல்லவா என் குடி விளங்கவேண்டும்? என் குடியின் விளக்கை ஏற்றப் பார்க்காது இவனையும் தங்களைப் போன்று ஆண்டியாக்கிவிடப் பார்ப்பது உங்களது துறவித்தனத்திற்கு நீதியா! இது நன்மையா?" என்று புத்திர வாஞ்சையின் மிகுதியால் ஏதேதோ கேட்டுவிட்டார்.

சாந்தஸ்வரூபியாகிய ஸ்வாமிகளுக்குக் கோபமே வரவில்லை. புத்திரவாத்ஸல்யம் எத்தகையது என்பது அவரறிவாராதலால் புன்னகையுடன் பேசத் தொடங்கி, "ஐயா! உமது அளவு கடந்த அன்பின் பெருக்கில் வார்த்தைகள் சிதறுவது சகஜந்தான். இருப்பினும், நான் எத்தனையோ சொல்லியும் அவன் கேட்கவில்லை. உமது விலாசமும் தெரியவில்லை. பிறகு பத்திரிகையில் உமது விளம்பரத்தையும், இவனது புகைப்படத்தையும் பார்த்து நான்தான் என் சிஷ்யன் மூலம் இவனுக்குத் தெரியாது கடிதமெழுதி உம்மை வரவழைத்தேன். உமது மகனை குசாலாக நீர் அழைத்துச் செல்லும் நான் தடை செய்யவில்லை. என்னுல் அவன் ஒருவிதமான தீங்கும் அடையவுமில்லை....அப்பா! மதுசூதனு! உன் கடமையை நீ இழக்கக்கூடாதென்று நான் பலமுறை சொல்லியும் நீ கேளாததால் உன் தகப்பனுரை நானே வரவழைத்தேன். நீ அவரிஷ்டப்படியே அவருடன் சென்று அவர் மனத்தைச் சந்தோஷப்படுத்து. நீ வைராக்கிய மார்க்கத்தை அனுஷ்டிக்க இன்னும் பின்னுல் காலமிருக்கிறது. தெரியுமா!...அப்பேர்ப்பட்ட மகானுகிய சங்கராச்சாரியருக்குக் கூட சம்சார சாகரத்தின் உண்மையைக் கண்ட பிறகுதான் மோக்ஷம் கிடைத்தது. ஆகையால், நீ சென்று வாப்பா!" என்று அன்புடன் கூறினுர்.

மன அதிர்ச்சியும் ஆவேசமும் கொண்ட மதுசூதனன், "ஐயோ! தாங்களா இந்தக் காரியம் செய்தது? நான் இந்த ஆனந்த நிலயத்தைவிட்டுப் போகவேமாட்டேன். தங்கள் பாதமே எனக்குத் துணை...என்னை அனுப்பாதீர்கள்" என்று கத்தி ஸ்வாமிகளின் பாதத்தில் விழுந்தான்.

ஸ்வாமி :—(அவனைத் தூக்கி நிறுத்தி தட்டிக்கொடுத்து) மதுசூதனு! கடமை என்பதைப்பற்றி நான் பலதரம் சொல்லவில்லையா!

ஸ்ரீராமபிரான் தன் பித்ருவாக்கிய பரிபாலனம் செய்யவில்லையா! 'உன் கடமையில் வழுவாதே' என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் கீதையில் சொல்லியதை மறந்தாயா! நீ உன் பிதாவின் விருப்பப்படிக்கு கூட போகத்தான்வேண்டும்—என்று அன்புடனேயே அழுத்தமாகச் சொன்னார்.

திரு:—ஸ்வாமி! அடியேனை க்ஷமிக்கவேண்டும். ஏதோ பதட்டமாக முதலில் பேசிவிட்டேன். அன்புதான் அதற்குக் காரணம்...பையனுக்கு நல்ல புத்திமதிகள் சொல்லியனுப்புவதோடு அவனை விவாகம்செய்துகொண்டு உலகத்தவர்களைப்போல் குடும்பம் விளங்கச் செய்யும்படி உபதேசம் செய்யுங்கள். அதுதான் எனக்கு வேண்டும்.

மது:—ஐயனே! முடியாது; முடியாது. கல்யாணம் என்கிற பேயிக்கு இனி நான் அடிமையாக முடியாது. அந்த பயங்கரத்தில் ஒருதரம் அகப்பட்டுக்கொண்டது போதும். இனியும் என்னை அழுத்தாதீர்கள். ஸ்வாமீ! ஸ்வாமீ! என்மீது கருணை வைக்கவேண்டும்.

ஸ்வாமிக்கு கடகடவென்று நகைப்பு வந்துவிட்டது. சிரித்துக் கொண்டே, "குழந்தாய்! விவாகம் செய்துகொள்வதும் குடும்பம் செழிப்பதும் விளையாட்டல்ல. மதுசூதனா! இன்று கூறும் இதே வார்த்தையை உன்னால் நிலைநாட்ட முடியவேமுடியாது. "நீங்கள் கேட்ட தடை உத்திரவை மீட்டுக்கொள்ளுங்கள். ரத்து செய்யுங்கள்'' என்று நீயே ஒரு காலத்தில் என்னிடம் முறையிடலாம். ஆகையால் எதையும் அதீதமாகப் பேசி விடாதே. போய்வாப்பா! போ! போ! குழந்தையைப்போல் அழாதே.

மது:—ஆனால் நான் இனி நரகத்தில் விழவேண்டியதுதானா! விமோசனமில்லையா!

ஸ்வா:—பயித்தியமே! சாமியாராகிக் காஷாயம் உடுத்தி பஜனை செய்தால்தான் முக்தி; இல்லையேல் நரகம் என்று நினைக்கிறாயா! இந்த தத்துவத்தை யார் உனக்குச் சொல்லியது? எந்த உடையிலிருந்தாலும், எந்த நிலைமையில் இருந்தாலும் முக்தியடைய சத்மார்க்கங்கள் அனேகமிருக்கின்றன. தாளத்தைத் தட்டிக்கொண்டு பஜனை செய்தால்தான் பகவான் வருவார் என்று நினைக்காதே. உன் கடமையில் நீ ஒழுங்காக நடந்துகொண்டு சதா சர்வகாலமும் பகவானை மனதார நினைத்து பஜி. பொய் சொல்லாதே. பிறர் மனதை நோகச் செய்யாதே. அக்கிரமத்தில் அணுவளவேனும் பிரவேசிக்

காதே. உயர்வு தாவு, ஏழை பணக்காரர், பலவான் பலஹீனன் என்றெல்லாம் வித்தியாசம் பாராட்டிக் கர்வம் கொள்ளாதே. எந்த ஒரு அணுவிலும் பகவான் இருக்கிறார்.' என்ற சத்தியத்தை நம்பு. உனக்கு ஓய்வுநேரம் கிடைத்தால் பஜனை செய்... நல்ல சத்புத்திரர்களைப் பெற்று உலகிற்கு உபகாரமாக உதவு. வீண் பிடிவாதம் செய்யாதே. உன் விருப்பப்படியே நீ அறியாதவாறு உன்னை நான் பரீக்ஷித்தேன். நீ ஜிதேந்திரியத்வம் வகிக்க இன்னும் பரிபக்குவமடையவில்லை என்பதை அறிந்தேன். சென்று வாப்பா"... என்று அன்புடன் உபதேசித்தார்.

மதுசூதனனுக்குத் துக்கம் தொண்டையை அடைக்கிறது. குழந்தையைப்போல் அழுதுகொண்டே "ஸ்வாமீ! இச் சமயம் தங்கள் உத்திரவின்படி நடக்கின்றேன். மற்றொரு சமயம் நான் தங்களிடம் வர நேர்ந்தாலோ, ஆலோசனை கேட்க நேர்ந்தாலோ, தாங்கள் இவ்வேழையை நிராகரிக்கக்கூடாது. நான் போய் வருகிறேன்... அப்பா! வாருங்கள்" என்றான்.

திருவேங்கடமும் அபாரமான சந்தோஷத்தை அடைந்து ஸ்வாமிக்கு வந்தனம் செய்துப் பின் மகனுடன் கிளம்பினர். மதுசூதனன் ஆச்ரமத்தைவிட்டுச் செல்வதில் அங்குள்ளவர்களெல்லோரும் மிகவும் வருத்தமுற்றார்கள். நல்ல சகவாஸமும் குதூகலமும் திடீரென்று வந்தது; திடீரென்று மறைந்தது. மனம் சமாதானமடையாது தவித்தது.

## 14

மனம் சமாதானமடையாது தவித்தது. நல்ல சகவாஸமும், குதூகலமும் திடீரென்று வந்தது; திடீரென்று மறைந்தது. உத்ஸாகமாயும் சுதந்திரமாயும் திரிந்த பக்ஷியைக் கூட்டிலடைத்தால் அது ஆகாரங்கூடத் தொடாமல் வருந்திச் சாவதுபோல் மதுசூதனன் நிலைமையாயிற்று. தாய் தந்தையைக் கண்டதனாலோ பழைய நண்பர்களைப் பார்த்ததினாலோ அவன் மனம் சந்துஷ்டியே அடையவில்லை. இதே பிரமைகொண்டவன்போல் ஒருவரிடமும் பேசாமல் எப்போதும் தனியாக உட்கார்ந்திருப்பதும், வேளா

வேளைக்குச் சாப்பிடாது பட்டினி கிடப்பதும் ஒருவரிடமும் கல கலப்பாய் பேசாது மௌனம் சாதிப்பதும் புதுமாதிரியான மனிதன் போல் சில தினங்கள் காணப்பட்டான்.

இவனை உயிரோடு கண்டுபிடித்ததே பெரிய சந்தோஷமாக நினைத்தார் திருவேங்கடம். ஆனால் ராஜம்மாள் அந்தமட்டில் திருப்தி அடையாது மறுபடியும் கல்யாணத்தைச் செய்வதற்கான முயற்சி யில் இறங்கிவிட்டாள். அவசரப்பட்டு எதையும் செய்துவிடாதே என்றும், கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம் என்றும் திருவேங்கடமே ராஜத்தைத் தடுத்து வந்தார்.

எப்படியோ, ஒரு நிமிடமாக ஒரு வருஷம் ஓடி மறைந்து விட்டது. மதுசூதனன் முன்பு தானாக நடத்திய ஒரு பஜனையை மீண்டும் நடத்தும் உத்ஸாகத்தில் பழய மாதிரியை மீண்டும் கொஞ் சம் அடைந்தான்.

திருவேங்கடத்திற்கு வயதாகிவிட்டதால் வேலையிலிருந்து உபகாரச் சம்பளத்துடன் விலகவேண்டிய அவச்யத்தில் விலகிவிட் டார். குடும்பத்தில் வருவாய் குறைந்துவிட்டதால் ஜீவனத்திற்குச் கஷ்டமான நிலைமை உண்டாகிவிட்டது. மதுசூதனன் ஏதாவது நாலுகாசு சம்பாதித்தால்தான் ஜீவனம் கஷ்டமின்றி நடக்கும் என்ற நிலைமை ஏற்பட்டதை மதுசூதனன் அறிந்துகொண்டான்.

திருவேங்கடம் எங்கெல்லாமோ திரிந்து ச்ரமப்பட்டு ஒரு மருந்து ஷாப்பில் கணக்கெழுதும் வேலையில் அமர்த்தினர். 25 ரூ சம்பளம் போட்டிருந்தார்கள். மதுசூதனன் எந்திரம்போல் ஆபீஸுக்குப் போவதும் வீடு திரும்புவதும் பஜனை கோஷ்டியுடன் ஆனந்தமாகப் பொழுதைப் போக்குவதுமாக ஒருவாறு வாழ்க் கையை நிலைநாட்டினன். கல்யாணப் பேச்சை எடுத்தால் மட்டும் கடுங்கோபங்கொண்டு சீறி விழுவான்.

முறட்டு மாட்டை விட்டுப் பிடித்து மூக்கணங்கயிற்றை மாட்டுவதுபோல் செய்ய எண்ணிச் சற்று பொறுத்தார்கள். முத வில் பட்ட அவமானத்தை மதுசூதனனல் மறக்கவே முடியவில்லை. கல்யாணமாகாத எந்த வாலிபனைப் பார்த்தாலும் இவன் வலுவில் தானே பிரசாரம் செய்வதுபோல் பேசத்தொடங்கி, "சார்! கல் யாணமே செய்துகொள்ளாதவர்கள் பாடு மிகவும் சந்தோஷ மானது. அப்படிச் செய்துகொள்வதானல் நன்ருக யோசித்து ஆய்ந் தோய்ந்து பார்த்து மணந்துகொள்ளுங்கள். உங்கள் அந்தஸ்துக்

கும், யோக்கியதைக்கும் மீறி பணமோ, வரிசைகளோ கொடுத்துப் பெண்ணைக் கொடுக்க முன்வருபவர்களைச் சற்றும் நம்பாதே யுங்கள். அம்மாதிரி இடத்தில் கட்டாயம் ஊழல் இருக்கவே இருக்கும். சந்தேகமே இல்லை. பெண்கள் குதிரைபோல் வளர்ந்தி ருப்பதையும், அழகாயிருப்பதையுங் கண்டு ஏமாறுதேயுங்கள். சம அந்தஸ்துக்கு மீறியதும், நிரம்ப வயதானதும், அதிக நாகரீகத்தில் மூழ்கி வரம்பு கடந்ததுமான பெண்களைக் கண்ணாலும் பார்க்கா தீர்கள். அதிக வயதானாலும், கூடுமான வரையில் அடக்கம், ஒழுக் கம் மரியாதை, பக்தி, கல்வியறிவு முதலியன இருக்கும் பெண்களை மணந்துகொள்ளுங்கள். படாடோபத்திற்கு ஆசைப்பட்டு உங்கள் வாழ்நாளைப் பாழ்படுத்திக் கொள்ளாதீர்கள். இந்த பயங்கரத்தை விடச்சிறிய வயதுப் பெண்களை களங்கமற்ற பெண்களை மணந் தால், நிம்மதியாக வாழலாம். காதல், காதல், என்பதெல்லாம் வெறும் பொய். கட்டுக் கதை ஹம்பக்கு" என்று பயித்தியம்போல் உபதேசம் செய்வான்.

ஏற்கெனவே இவனுக்குள்ள பயித்தியம் என்கிற பெயரை இன்னும் நிலைநாட்டிச் சிலர் சிரிப்பார்கள். சிலர் நம்பி மதிப் பார்கள். உலகம் பலவிதமல்லவா! மதுசூதனனுக்கு அந்த மனப் புண் ஆறும் வரையில் தாம் எது சொன்னாலும் காதில் ஏறுது என்று தெரிந்து திருவேங்கடம் பொறுமையுடன் இருந்தும் அவருடைய தருமபத்தினி அதைக்கேட்காது பிடிவாதம் செய்யத்தொடங்கினுள்.

இதற்கிடையில் பின்னும் ஒரு வருடம் சென்று மறைந்தது. அந்த மருந்துஷாப்பின் கூட்டாளிகளுக்குள் உண்டாகிய சச்சரவி ஞல் கம்பெனி மூடப்பட்டு வேலையிலிருந்தவர்களுக்கு நிரந்தரமான விடுமுறை கிடைத்துவிட்டதால் மதுசூதனனும் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

திருவேங்கடத்திற்குத் தெரிந்த ஒரு டாக்டரிடம் கம்பவுண்டர் வேலைக்கு அமர்த்தினுர். மருந்து ஷாப்பில் வேலைக்கிருந்து அனேக மருந்துகளின் விவரமும், பெயரும் தெரிந்ததால் அவனுக்கு இந்த வேலை சுலபமாக ஆய்விட்டது. ஒன்னும் ஒன்னும் ரெண்டு என்று கணக்கு எழுதுவதைவிட இந்த வேலை அவனுக்கு சுலபம்போலத் தோன்றியது. ஆனல் உண்மையில் டாக்டர் எழுதியுள்ள மருந்துகளை அளவு குறையாமல், முறை தவருமல், ஒன்றுக்கொன்று மாறுடிப் போகாமல் சரியான பக்குவமாய்ச் செய்து கொடுப்பதில்தான் கஷ்

டம் இருக்கிறது. முதலில் அது தெரியாதிருப்பதுசகஜந்தானே!

சதா வாயில் ஏதோ பாட்டை முணுமுணுத்துக்கொண்டே மருந்தைச் செய்து அவரவர்களிடம் கொடுப்பதும், வேலையில்லா திருக்கையில் உட்கார்ந்திருப்பதும், ஒரு பொழுதுபோக்காக விருந்தது. ஆனால் அங்கு வரும் பலவிதமான நோயாளிகளைப் பார்க்கும் போதும் அவர்கள் வயித்தியரிடமோ அல்லது ஒருவருக்கொருவரிடமோ நோயின் கொடுமையைப்பற்றிப் பேசுவதைக் கேட்கும் போதும் மிகவும் வருத்தமாயும் சில சமயம் பயங்கரமாயும், சில சமயம் வெறுப்பாயும், சில சமயம் பச்சாத்தாபமாயும் தோன்றும். 'உலகத்தில் இத்தனை வியாதிகள் இருக்கிறதா!' என்று நினைக்கும் போது மிகவும் பயமாக விருக்கும்.

ஊமைபோல் உட்கார்ந்திருக்கும் சுபாவமுடைய மதுசூதனனுக்கு மருந்து ஷாப்பில் வேலையிலிருந்ததாலும், அடுத்து இங்கு கம்பவுண்டராக விருப்பதாலும் மருந்துகளைக் கொடுத்துச் சாப்பிடும் முறைகளைக் கூறும் வகையில் தைரியமாகப் பேசிப் பழகும் புதிய மாறுதல் ஏற்பட்டது.

ஒருதினம் டாக்டர் வெளியில் சென்றிருந்ததால் கன்ஸல்ட்டிங் ரூமில் மதுசூதனன் உட்கார்ந்திருந்தான். அப்போது டாக்டரின் மேஜைமீது ஒரு நாவல் புத்தகம் வைத்திருந்தது. பொழுதுபோக்கிற்காக அதை எடுத்துப் புரட்டினான்.

அதில் ஒரு பக்கத்தில் அன்யோன்யமாய் அன்புடன் குலாவும் காதலர்களின் சித்திரமும் அதனடியில் "அன்பே! உன்னுடைய பிரேமை நதியில் நான் திளைக்கின்றேன். உன் தரிசனம் காணாத நேரமெல்லாம் எனக்கு இவ்வுலகமே சூன்யமாயிருக்கிறது. உன்னுடைய சந்திரவதனத்தின் அமிருத கிரணம் என்மீது படும்போது நான் சொர்க்கத்திலிருப்பதுபோல் பூரித்துப் புலகிதமடைகின்றேன். கண்மணீ! இதோ பார்"....

இதற்குமேல் படிக்க அவனால் முடியவில்லை. "தூத்தூ! வெட்கங்கெட்ட பிழைப்பு. பிரேமையாம்...பெருங்காயமாம். இந்த காதலும் கத்தரிக்காயும் யாருக்குவேண்டும்? சுத்தமடையன். இந்த அவதார ஸ்வரூபத்தைப் பார்க்காவிட்டால் உலகம் சூன்யமாகிவிட்டதாம்! ஐயோ! ப்ரக்ருதியே! இந்த சூன்யத்தைவிட வேறு சூன்யம் உனக்கு இருக்கிறதா? இந்த மாதிரி புத்தகங்களையா டாக்டர் படிக்கிறார்?...ஆம்...இப்போதல்லவா ரகஸ்யம் தெரிகிறது. இம்

மாதிரி புத்தியுடன் அவர் இருப்பதால்தான் அவரிடம் வரும் இளம் பெண்களை எல்லாம் ஒருமாதிரி பார்ப்பதும், சிரிப்பதும், பரீக்ஷிப் பதிலேயே வித்யாஸம் காட்டுவதுமாக விருக்கிறார். இம்மாதிரி புத்தி டாக்டர்களுக்கு இருக்கலாமா! என்று தனக்குள் எண்ணிய படியே அந்தப் புத்தகத்தை விசிறி எறிந்தான்.

பீடை பிடித்த காதல்! 'காதல் காதல்' என்று அடித்துக் கொண்டு சாவதைவிட உலகத்தில் மக்களுக்கு வேறு விஷயங் கிடையாதா? பாழய்ப்போன காதலாம் கல்லெடுப்பாம்" என்று வெகு ஆத்திரத்துடன் திட்டினான்.

பின்னும் சில நாட்கள் சென்றன. டாக்டரிடம் வரும் நோயாளிக் கூட்டத்தின் எண்ணிக்கை அதிகரித்தது. காரணம் அப் போது ஊரில் ஒரு மாதிரியான ஜுரம் திடீரென்று அதிகரித்துப் பரவியதேயாகும். மருந்து கலந்துகொடுக்கமுடியாது திணறிப் போகும்படியான நிலைமையுண்டாயிற்று.

சுமார் 60 வயதுக் கிழவியொருத்தியை அழைத்துக்கொண்டு வந்த ஒரு யுவதி, சீட்டைக் கொடுத்து வெகு நேரமாகியும் மருந்து தராததால் அவள், மருந்து செய்யும் அறைக்கு அருகில் வந்து "ஐயா! தர்மாம்பாளம்மாள் சீட்டைப் பார்த்து தயவு செய்து சீக்கிரம் மருந்து கொடுங்கள். நோயாளியால் உட்கார முடிய வில்லை. நாவரட்சியாயிருக்கிறதாம்" என்று யாழ்போன்ற குரலில் கேட்டவாறே கண்ணீர் முட்ட நின்றாள்.

பருவகாலத் தருணியாய் அதிரூப சுந்தரலாவண்ய வதனியாய் சுறுசுறுப்பான பார்வையுடன் சுமார் 18, 19 வயதுள்ள மங்கை கேட்டதை மதுசூதனன் திரும்பிப் பார்க்காமலேயே 'இதோ பார்க் கிறேன். இருங்கள்' என்று கூறியவாறு மருந்துகளைக் கலந்து கொண்டிருந்தான்.

பிறகு தர்மாம்பாள் என்ற சீட்டைப் பார்த்து மருந்துசெய்து "தர்மாம்பாள் மருந்து இதோ!" என்று வழக்கம்போல் ஒரு தர்மக் கூச்சல் போட்டபடி மருந்தைக் கையில் வைத்திருந்தான். அங்கு கூடத்தில் நோயாளிக்கென்று போடப்பட்டிருந்த பெஞ்சியின் மேல் அவ்வழகி உட்கார்ந்து தாயாரின் தலையை அமுக்கிக்கொண் டிருந்தாள். இந்த குரலைக்கேட்டதும் எழுந்து ஓடி வந்து 'இப்படி கொடுங்கள்' என்று மான்போல் மருண்ட பார்வையுடன் கேட்டு கையை நீட்டி வாங்கிக் கொண்டாள்.

அந்த எழில்மிக்க மடந்தையின் கண்ணில் துக்கமும் ஏக்கமும் குடிகொண்டிருந்ததை கற்றுக்குட்டிக் கவியாகிய மதுசூதனன் ஒரு நொடியில் உணர்ந்துகொண்டான். நிலவு உதயமானார்போல் முகக் காந்தியில் விசனம் தேங்குவது ஒரு விதமான அழகாக விருந்தது. மருந்தை வாங்கிக்கொண்ட மடந்தை,



**"மிக்ஸ்சர்மட்டுந் தானா! மாத்திரை, பவுடர் ஒன்றுமில்லையா!" என்று துக்கம் தேங்கிய குரலுடன் கேட்டாள்.**

மருந்தைக் கொடுத்துவிட்டு இன்னொருவருக்கு மருந்து செய்யப்போய்விடும் வழக்கமுடைய மதுசூதனன், தன்னை அறியாது மருந்தைக் கொடுத்துவிட்டு ஒரு க்ஷணநேரம் அப்படியே நின்றான். அந்த சுந்தராங்கி கேட்டதும், உடனே தர்மாம்பாள் சீட்டை எடுத்துப்பார்த்து "வேறு ஒன்றுமில்லையம்மா! இதை நன்றாகக் குலுக்கி நாலுமணிக் கொருதரம் கொடுங்கள்" என்றான்.

உடனே அம்மடந்தை தன் தாயாரிடம் ஓடி மருந்தைக் குலுக்கி ஒரு டோஸ் அவள் வாயில் வார்த்துக் குடிக்கச்செய்து மாரைத் தடவியவாறு, "அம்மா! ரொம்ப கசப்பாயிருக்காம்மா!

மெள்ள சமாளிச்சுக்கோம்மா!" என்று அன்பொழுகக் கூறினுள்.

சற்று நிதானித்ததும் அவளை மெல்லப் பிடித்து நடத்தி அழைத்துச்சென்றுள். மதுசூதனன் இத்தனை நேரமும் தன் வேலையை அடியோடு மறந்துபோய் கூடத்தில் வைத்த விழியை வாங்காது நின்றிருந்தான். இதற்குள் இன்னும் மற்ற நோயாளிகள், "ஐயா! நிக்கமுடியல்லே. மருந்து கொடுங்கய்யா! வேடிக்கைப் பாக்கிறீங்களே" என்று சற்று கடினமான தொனியில் கேட்டபிறகே சூடுரைக்கப்பட்டவன்போல் மருந்தினிடம் ஓடிவந்தான்.

தடதடவென்று மருந்துகளைச் செய்து வழக்கம்போல் கொடுத்தான். ஆனுல் மனத்தில் ஏதோ ஒருவிதமான சஞ்சலம் உண்டாகிக் குழப்பியது. நல்ல சலவைத் துணியில் ஒருதுளி அழுக்குப்பட்டு விட்டதுபோன்ற ஏதோ ஒன்று திடீரென்று புகுந்ததுபோல் தோன்றியது. அடிக்கடி கண்கள் கூடத்துப்பக்கமே நோக்கின. ஆனுல் அங்கு யார் இருக்கின்றுர்கள்?

"மிக்ஸ்சர்மட்டுந்தானு! மாத்திரை பவுடர் ஒன்றுமில்லையா!" என்கிற வார்த்தை திடீரென்று கணீரென்று கேட்கவாரம்பித்த அதிசயத்தை அவனுலேயே அறியமுடியவில்லை. "இதென்னப் பேதமை? இதென்ன பிரமை...சீ...பிசாசே!"....என்று தனக்குள் வீராப்பாகப் பேசிக்கொண்டான். அன்று காலைப்பொழுது மருந்து கலக்கும் வேலை ஒருவாறு முடிவடைந்து வீட்டிற்கு வந்து வழக்கம் போல் சாப்பிட்டுவிட்டுப் படுத்தான்.

இதுகாறும் எத்தகைய களங்கமும் கனவிலும் கண்டிராத மதுசூதனனுடைய மனத்தின் தெளிந்த ஊற்றில் ஒரு சிறிய குழப்பம் உண்டாகியது. "மிக்ஸ்சர்மட்டுந்தானு! மாத்திரை பவுடர் ஒன்றுமில்லையா!" என்கிற மதுரகானம் போன்ற வார்த்தைகள் மட்டும் காற்றில் ஆடி ஆடி வந்து 'கணீர்! கணீர்!' என்று அவன் காதில் ஒலித்து அதே சமயம் இதயத்தில் ஒரு நூதன அதிர்ச்சி உண்டாகி திடும் திடும் என்று தூக்கி வாரிப்போடுவதையும் அவனுல் தடுக்கவே முடியவில்லை.

அந்தப் பூங்கொடியின் துக்கமும், ஏக்கமும் நிறைந்த கண்கள் அடிக்கடி கண்முன்பு தோன்றியதைத் தடுக்க அவன் தன் கண்களை மூடிக்கொண்டாலும் முடியவில்லை. அவன் மறக்கவேண்டுமென்கிற தீவிர எண்ணத்தினுல் பல்லைக் கடித்துக்கொண்டே எழுந்து அவ்வறையிலேயே உலாவினுன்.

"மிக்ஸ்சர்மட்டுந்தானு! மாத்திரை, பவுடர் ஒன்றுமில்லையா!" என்கிற வார்த்தைகள் முன்னும் பின்னும் சக்கரம்போல் சுழன்று அவன் இரு காதுகளிலும் மாறி மாறி த்வனித்து மல்யுத்தம் செய்தன. அது போதாதற்கு அம்மடந்தையின் நீர்க்குளம்போன்ற கண்கள் சுவரிலும், கதவிலும், கம்பத்திலும் தெரிந்து வேறு மிரட்டின. என்ன செய்வான் பாவம்?

பித்து பிடித்தது போலாய்விட்டது. சொல்லமுடியாத வேதனையினுல் பெருமூச்சு துரத்தியடித்து முகத்தில் சோகத்தை நிரப்பியது.

## 15

சொல்லமுடியாத வேதனையினுல் பெருமூச்சு துரத்தியடித்து முகத்தில் சோகத்தை நிரப்பியது. பித்துபிடித்தது போலாய்விட்டது. "அம்மா! அம்மா! உனக்கென்ன செய்கிறதம்மா! டாக்டரைக் கூப்பிட்டுக்கொண்டு வரட்டுமா?" என்று கூறிக்கொண்டே அவ்வழகிய நங்கை தாயாரின் தலையைப் பிடித்தபடியே கேட்டாள்; ஜுரமோ காய்கிறது.

நோயாளியின் முக்கலும், முனகலும் அந்த சிறிய அறையில் அப்படியே எதிரொலி செய்து கும்மென்று சூழ்ந்து பயத்தையுண்டுபண்ணியது. "அம்மா! விலாசினீ!....என்னுல் மண்டை இடி பொறுக்கமுடியவில்லை. தலையை அப்படியே உடைத்துவிடுகிறது. கண்ணெரிச்சல் கண்ணைத் திறக்கவேமுடியவில்லை. என்ன செய்வேன்? தாகம்! தாகம்! கொஞ்சம் ஜலங்கொடு" என்று கேட்டாள்.

விலாசினி அப்படியே தாகத்திற்குத் தீர்த்தம் கொடுத்துவிட்டு "அம்மா! நானுவது டாக்டரிடம்போய் தலைவலிக்கு மருந்து வாங்கி வருகிறேன். படுத்திரும்மா!" என்று கூறிவிட்டு மருந்து புட்டியுடன் டாக்டர் வீட்டிற்கு ஓட்டமாக ஓடினுள். பொழுது சாய்ந்து அஸ்தமிக்கும் சமயமாகிவிட்டது.

டாக்டரிடம் யாரோ ஒருவர் அவசர அவசரமாக வீட்டிற்கு அழைத்துச் செல்லக்கூப்பிட்டுக்கொண்டிருந்தார். அதே சமயம் இன்னும் சில நோயாளிகள் அவரைச் சுற்றிக்கொண்டு "டாக்டர்!... வலிகுறையலேயே! வீக்கம் வடியலேயே! வாந்தி அதிகமாகிவிட்

டதே, வயித்துநோவு வதைக்கிறதே; ஜலமே இறங்கவில்லையே! ஜுரம் கொஞ்சம் குறைந்திருக்கிறது. ஆனால் தலைவலி நிற்கவில்லை." இவை போன்ற பல வார்த்தைகள் ஒவ்வொருவருடைய வாயினின்றும் சிதறின.

டாக்டர் தொழில் சாமான்யமானதா! சதாவதான சங்கத்வனி என்பார்களே! அதற்குமேல் ஸஹஸ்ராவதானம் பீரங்கித்வனியாயிருந் தாலும் போதாது. டாக்டர் மிக்க பொறுமையுடன் எல்லோருக்கும் தக்கவாறு பதில் சொல்லிக்கொண்டிருக்கையில் விலாசினி அங்கு பதைக்கப்பதைக்க ஓடிவந்தாள்.

டாக்டரைச் சூழ்ந்துகொண்டிருக்கும் கும்பலைக்கண்டு சற்று அச்சமுற்று சில வினாடிகள் நின்றாள். பிறகு நேரமாவதால் தானும் அந்த கும்பலின் மத்தியில் சென்று, 'டாக்டர்! அம்மாவுக்கு ஜுரம் கொஞ்சமும் குறையவில்லை. மண்டையிடி சகிக்காது துடிக்கிறாள். ஐந்தாறுதடவை வாந்தியாகிவிட்டது. ஆகாரமே தக்கவில்லை. தாகம் நாக்கை வரட்டுகிறது. கொஞ்சம் தயவுசெய்து வந்து பாருங்களேன்' என்று கெஞ்சிக்கேட்கும்போது தாயின் அன்பின் வேகம் தொண்டையை அடைத்துக் கம்மியது. கண்களில் நீர் நிறைந்தது.

டாக்:—உம்...இதற்கெல்லாமா அழுதுவிடுவது? அம்மாவுக்கு ஒன்றும் பயமில்லை. நேற்றுதானே ஜுரம் வந்தது. இதோ பாரு! இத்தனை பேர்களும் அவஸ்தைப்படுகிறார்கள். அதைர்யப்படாதே. நாளைக்குச் சரியாகிவிடும். வேறு மருந்து தருகிறேன். அதைக் கொடு. பயப்படாதே....போ—என்று ஒரு சீட்டு எழுதினார்.

விலாசினியின் குரல் கேட்டவுடனேயே மதுசூதனனை ஒரு குலுக்குக் குலுக்கியது. அவனுடைய தத்தளிக்கும் இதயத்தில் ஒரு இன்பக் காற்று சில்லென்று வீசி ஒருமாதிரியான சந்தோஷ மலர் புஷ்பித்ததுபோன்ற பரபரப்பை யுண்டாக்கியதால் கூடத்தை எட்டிப்பார்த்தான். விலாசினியின் நிலைமை மிகவும் பரிதாபமாக விருப்பினும் அவளுடைய தோற்றம் தேவகன்னிகையின் தோற்றம் போலிருந்தது. "இவள் சாதாரண பெண்ணா! இல்லை; இல்லை... மோகினி தேவதையாக விருப்பாளோ!" என்றெல்லாம் ஒரு நிமிஷம் நினைத்தான்.

அதே சமயம் டாக்டர் "இந்தாம்மா சீட்டு! மருந்தை வாங்கிக் கொண்டுபோ அதைர்யப்படாதே. நாளைக்குச் சரியாய்விடும். இரண்டு பொட்டலங்களில் ஒன்று இப்போது கொடு. தலைவலி

நின்று தூக்கம் வரும். அப்படித் தூக்கம் வராவிட்டால் இரண்டாவது பொட்டளத்தையும் கொடு. காலையில் எப்படியிருக்கிறதென்று சொல்லு. பிறகு நான் வரவேண்டுமாயின் வருகிறேன்'' என்றார்.

விலா:—ஆகாரமே தக்கவில்லையே! என்ன செய்வது டாக்டர்?

டாக்:—இன்று அப்படித்தான் இருக்கும். நாளை சரியாகிவிடும். சோடா வாங்கிக்கொடு. லெமன்க்ரஷ், ஆரஞ்சுக்ரஷ் முதலியன கொடு. வாந்தியாகாது—என்று கூறிவிட்டுப் போனார்.

சீட்டை எடுத்துக்கொண்டு வாடி வதங்கிய கொடிபோல் துவண்டு சீட்டையும், மருந்து புட்டியையும் மேஜைமேல் வைத்துவிட்டுப் பதுமைபோல் நின்றாள். இப்பதுமையைக் கண்டதும் மதுசூதனனின் உள்ளத்தில் தடுக்கமுடியாத ஒருவிதமான வேகமும் படபடப்பும் உண்டாயின. இந்த மாறுதல்களின் காரணத்தை அவனால் அறியக்கூடவேயில்லை. அப்பெண்ணரசியை இமைகொட்டாது பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டும்போன்ற ஒரு வேட்கை, அவளிடம் பேசலாமா என்று ஒரு தாபம், சோகமே உருவாய் அமைந்ததுபோல் காணப்படும் அவ்வழகியின் முகத்தைப் பார்த்து ஒருவிதமான பச்சாத்தாபம்....ஒன்றுமே தோன்றாது சில விநாடிகள் நின்றான். உடனே சுய உணர்வு பெற்று மருந்து செய்து அவளிடம் கொடுத்துப் பின்னர் "ஏனம்மா! ஜுரம் எத்தனை டிக்கிரி இருக்கிறதம்மா?'' என்று தைரியமாய்க் கேட்டுவிட்டான்.

விலா:—டிக்கிரி எல்லாம் எனக்கென்ன தெரியும்? நெருப்புபோல் காய்கிறது. அம்மா தனியா இருக்கா; சீக்கிரங்கொடுங்கள்.

மது:—மருந்து கொடுத்துவிட்டேனே...

விலா:—பொட்டளம் கொடுக்கவில்லையே! டாக்டர் கொடுக்கச் சொன்னாரே!

மது:—அடடா! மறந்தேபோய்விட்டேனே!...இதோ தருகிறேன்—என்று கூறி மருந்தை பக்குவம் செய்து இரண்டு பொட்டளம் கட்டிக் கொடுத்தான். விலாசினி அதை வாங்கிக்கொண்டு புள்ளிமான்போல் துள்ளி மறைந்துவிட்டாள். மதுசூதனன் தன் வேலையை மறந்து அவள் சென்ற திக்கையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்து பிறகு மற்றவர்கள் மருந்துக்காகக் காத்திருப்பதை உணர்ந்து காரியத்தில் இறங்கினான்.

அன்று வேலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் காலையிலிருந்த பயித்தியத்தைவிட பின்னும் ஒரு டிக்கிரி அதிகமாகிவிட்டதால்

அவனுடைய மாறுதல் அவனுக்கே வெகு விநோதமாயும், ஒருபுறம் சிரிப்பாயுமிருந்தது. "நீ ஜிதேந்திரியன் என்றும், மாயையைவென்று விட்டதாயும் நினைக்கிறாயா" என்று ஸ்வாமிகள் கேட்ட கேள்வி ஆணி அறைவதுபோல் அவன் காதில் ஒலித்து குத்திக் காட்டுவது போலிருந்தது.

"என்ன ஆச்சரியம்! பந்தயம் வைத்து ஜெயிக்கும்படிக்கு வீராப்பு பேசிய நானா கேவலம் ஒரு பெண்ணுக்காகப் பெருமூச்சு விடுவது? சீச்சீ! வெட்கக்கேடு" என்று அவன் ஒரு வினாடிநேரம் வைராக்யமாக நினைக்கும்போது, "மிக்ஸ்சர்மட்டுந்தானா! மாத்திரை பவுடர் ஒன்றுமில்லையா?...டிக்கிரி எல்லாம் எனக்கென்ன தெரியும்? நெருப்புபோல் காய்கிறது. அம்மா தனியாயிருக்கிறா; சீக்கிரம் கொடுங்கள்" என்று அந்தப் பெண் கூறிய அமிருதம்போன்ற வார்த்தைகள் இரு காதுகளிலும் கணீர், கணீர் என்று ஒலித்து ஒரேயடியாக அவனைக் கலக்கிக் குழப்பிவிட்டன.

இரவு முற்றும் வைராக்யமும், மாயையும், அவனிடம் மாறி மாறித்தோன்றி மல்யுத்தம் செய்து அவனை மிகவும் சிரமப்படுத்தி விட்டன. "இதுதானா காதல்நோயின் முதல்படிக்கட்டு?...இந்த மாயையைத்தானா நம் ஸ்வாமிகள் ஜெயிக்கவேண்டுமென்று சொன்னது...என்ன ஆச்சரியம்! அந்த நங்கையின் உருவத்தையும், வார்த்தைகளையும் எத்தனை விலக்கியும் அவை என் மனத்தைவிட்டு ஒரு விநாடியும் விலகாது சோதனை செய்கின்றதே....

இந்த வெட்கக்கேட்டை நம் குருநாதர் பார்த்தால் என்ன நினைப்பார்? சீச்சீ! இனி அந்தப் பெண்மணி வந்தால் திரும்பியே பார்ப்பதில்லை. அவள் குரலும் கேட்காதபடி காதில் பஞ்சை யடைத்துக்கொண்டு இந்த மாயா மோகத்தை ஜெயித்துவிடுகிறேன். மனிதனின் உணர்ச்சியை மனிதனாலேயே கட்டுப்படுத்தமுடிய வில்லை என்றால் பிறகு என்ன இருக்கிறது?"...என்று தனக்குள் வீராப்புடன் முடிவுகட்டிக்கொண்டான்.

உதயத்திற்கெல்லாம் வழக்கம்போல் டாக்டர் வீட்டிற்குச் சென்றான். டாக்டர் வருவதற்கு முன்பே இவன் சென்று வென்னீர் தயார்செய்து டாக்டருக்கான வேலைகளை ரெடிசெய்து வைப்பது வழக்கம். பிறகுதான் டாக்டர் வருவார். அன்று வைராக்கியத்துடன் மதுசூதனன் இன்னும் சீக்கிரமே சென்றுவிட்டான்.

நோயாளிகள் உட்காரும் இடத்தை தாண்டித்தான் மருந்து

செய்யும் விடுதிக்குப் போகவேண்டும். அங்கு வேலைக்காரி கூட இன்னும் வந்து பெருக்கவில்லை. ஆனால் பெஞ்சியின்மீது குளம்போல் நீர்தேங்கும் கண்களுடன் விலாசினி உட்கார்ந்திருந்ததைப்பார்த்ததும் தூக்கிவாரிப்போட்டது.

காதில் பஞ்சடைத்துக்கொண்டு கண்ணை கெட்டியாய் மூடிக் கொள்ள வேண்டுமென்ற சங்கல்பத்துடன் வந்த வைராக்கிய சிகாமணி கதிகலங்கிப்போய் தடைகட்டிய நாகம்போல் நின்றான்.

இவனைக் கண்டதும் விலாசினி துக்கம் அடைக்கும் குரலுடன் ஆவேசமாகப் பேசத்தொடங்கி, "ஐயா! தயவுசெய்து உள்ளே போய் சற்று டாக்டரைக்கூப்பிடுங்களேன். நான் ஒருமணி சாவகாசமாய்க்காத்துக்கொண்டிருக்கிறேன். என் தாயாரின் நிலைமை என்னுயிரை வாட்டுகிறது....ஐயா! தயவுசெய்யுங்கள்...அவசரம்" என்று கெஞ்சியவாறு கேட்கும்போது அவள் அழகிய கன்னத்தில் கண்ணீர் முத்துக்கள் தாரைதாரையாக உருண்டு ஓடின. பெருமூச்சின் விசும்பல் கருநாகத்தின் சீற்றத்தைப்போல் சப்தித்தது.

இந்தப் பரிதாபக்காக்ஷியைக் கண்ட மதுசூதனனின் உள்ளம் தானகவே உருகிவிட்டது. ஐயோ, பாவம்! என்கிற பச்சாத்தாபம் பொங்கி எழுந்த வேகத்தில் வைராக்கியம் என்கிற வஸ்து அடித்துக்கொண்டுபோய்விட்டது. இவளுடன் பேசுவதற்கு எதிர்பாராத விதமாய் இப்போதே சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதானது ஒருபுறம் பெருமையாகவே தோன்றியது.

மது :—அம்மணீ! சில டாக்டர்களைப்போல், பூஜை புனஷ்காரம், ஜபம், தபம் முதலியவைகளைக் கனவிலும் நினைக்காத கோஷ்டியில் இந்த டாக்டர் சேர்ந்தவரல்ல. இப்போதுதான் அவர் பூஜையிலிருப்பார். இப்போது அதைவிட்டு வரவேமாட்டாரே!

விலா :—ஐயோ! ஆபத்தாகவிருக்கிறதே. அவர் வராவிட்டாலும் நீங்களாவதுபோய்க் கேட்டுவந்து சொல்லுங்களேன். ஆபத்தில் உதவிபுரிந்தால் அதுவும் பகவானுக்கு மிகவும் இன்பமாயிருக்குமே! நீங்கள் கூப்பிட்டுப் பாருங்களேன்.

மது :—இதோபோய் வருகிறேன்—என்று கூறி உள்ளே சென்று மீண்டும் திரும்பிவந்து "அம்மணீ! இதோ வந்துவிட்டேன் என்றார். கவலைப்படாது உட்காருங்கள். ராத்திரி தூங்கினர்களா!"

விலா :—தூக்கம் என்கிற பெயரே இல்லை. வாந்தி எடுத்து எடுத்து வயிறுபுண்ணாய் வலிக்கிறதாம். ஜுரமும் குறையவில்லை. ஒரு

விதத்திலும் குணமே இல்லை. எனக்கு மிகவும் பயமாயிருக்கிறது...

மது :—உங்களுக்கு கூடப்பிறந்தவர்கள் இருக்கிறார்களா! அவர்களுக்குக் கடிதமெழுதி வரவழைக்கக்கூடாதா! சற்று காரமாயிருக்குமே...

விலா :—உம்...எனக்குக் கூடப்பிறந்தவர்கள், மக்கள் மனிதர்கள் சகலமும் என் தாய் ஒருத்திதான். சுருங்கச்சொல்லின் எனக்கு அவள் பிரபஞ்சம்; அவளுக்கு நான் பிரபஞ்சம். எங்களிருவருக்கும் கடவுள்தான் திக்கு...ஐயோ!...நேரமாகிறதே. டாக்டர் வருகிறாரா பாருங்களேன். திக்கில்லாமல் விட்டுவிட்டு வந்திருக்கிறேன்—என்றாள்.

'கண்ணை மூடிக்கொண்டு காதில் பஞ்சடைத்துக்கொள்ளும் பேர்வழி நீ தானா! பேஷ்! அந்தப் பெண்ணுடன் பேசும்போது சொர்க்கப்பதவியையல்லவா காண்கிறாய்?' நீயாவது மாயையை ஜெயிப்பதாவது?' என்று அவன் மனச்சாக்ஷியே அவனை குத்திக்காட்டுவதுபோல் தோன்றியது.

டாக்டர் வந்தால் என்ன நினைப்பாரோ என்ற அச்சம் தோன்றியதால் தலைகுனிந்தவாறு தன் வேலையைக் கவனிக்கப் போய்விட்டான். மனத்தையும், கண்ணையும் மட்டும் அவனால் மீட்கமுடியவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் டாக்டர் வந்தார். "என்ன சமாச்சாரம்" என்று அன்புடன் கேட்டபடியே விலாசினியுடன் வீட்டிற்குச் சென்றார்.

"இந்த டாக்டர் ஏன் அங்கு செல்லவேண்டும்? இங்கேயே அழைத்துக்கொண்டு வரச்சொல்லியிருந்தால் மறுபடியும் அவ்வணங்கு இங்கு வருவாளல்லவா! இனிமேல் வரமாட்டாளே!" என்ற ஒரு புதிய ஏக்கம் மனத்தில் குடிபுகுந்தது. உடனே "எப்படியும் டாக்டர் எழுதிக்கொடுக்கும் மருந்தை வாங்கிச்செல்ல அவளே வருவாளல்லவா!" என்ற ஒரு நம்பிக்கையும் தோன்றியது.

அதே தெம்புடன் தன் வேலையிலிறங்கினான். பின்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் டாக்டர் வந்துவிட்டார். அவளும் பின்னாலேயே வருவாள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் இவனை சோதிப்பதற்கொப்ப தர்மாம்பாள் சீட்டை எடுத்துக்கொண்டு ஒரு வேலைக்காரக் கிழவி வந்து சீட்டையும் புட்டியையும் நீட்டியதைக் கண்டதும் மனது இடிந்துவிட்டது. எங்கிருந்தோ ஒரு சோர்வும், கலக்கமும், ஏமாற்றமும் குடியேறி வந்துவிட்டன.



183044




பல்லாயிரக்கணக்கானவர்
படித்து மகிழ்ந்த
நமது
பொன்விழா நாவல்

## ஆத்மசக்தி

முதல் பதிப்பு—
ஜனவரி **1940.**
இரண்டாம் பதிப்பு—
ஏப்ரல் **1940.**

**11 ஆப்டோன் படங்கள்**
பலவர்ணங்களில்
அச்சிடப்பட்டுள்ளன.
தபாற் செலவு உள்பட
உள் நாடு—ரூ. 1-4
வெளி நாடு—2 ஷில்லிங்
அனுப்பிப் பெற்றுக்
கொள்ளவும்.

## சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணு விலையுள்ள நாவல்களை இனுமாகக் கொடுக்கப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணு நாவலுக்கு 1 அணு வீதம், தபாற் செலவுக்காகச் சேர்த்தனுப்பவும்.

மானேஜர்.

நீங்கள் பல வருடங்களாக
எதிர்பார்த்த புதிய பதிப்பு

## மாதவமணி

**முற்றிலும் புதிதாக மாற்றி**
**பெரிதாக எழுதப்பட்டுள்ளது**
(முதல் பதிப்பு 24 பக்கங்கள் 3 அணு)
இரண்டாம் பதிப்பு 64 பக்கங்கள் 4 அணு
**தபால் செலவு உள்பட**
உள்நாடு ரூ. 0—4—9 ஸ்டாம்பு
வெளி நாடு-2 போஸ்டல்கூப்பன்கள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

"JAGANMOHINI" Vol. XVII No. 8. Regd. No. M. 2210



**ஸ்நான விஷயம்** காலைப்பொழுது ஆற்றங்கரையில் ஜனங்கள் ஸ்நானம் செய்யும் காக்ஷிதான் என்ன! அவர்கள் குளிக்கும்போது நாலாபக்கமும் தெறிக்கும் நீர்த் துளிகள் கதிரவனொளியில் எப்படி பளீரென மின்னுகின்றன! நீர்த்துறைப் படிகள் மீது ஆங்காங்கு நீளம் நீளமாக கரிய நிழல்கள் வீழ்ந்திருப்பதையும் காணலாம். நம் நாட்டுமக்களுக்கெல்லாம் நதியிலாவது, கிராமக்கிணற்றங் கரையிலாவது அல்லது ஏகாந்தமாக அவரவர்கள் இல்லங்களிலாவது தினசரி ஆனந்தமாக ஸ்நானம் பண்ணுவது ஓர் சுககரமான ஆசார விதியேயாம். அத்துடன் தேய்த்துக் குளிக்க எல்லோரும் நறுமணம் கமழும் ஹமாம் ஸோப்பையே விரும்பவும் செய்கிறார்கள் பாருங்கள்!

ஓர் விஷயம் ஸ்நானம் பண்ணுபவரெல்லோரும் ஒப்புக்கின்றனர்.

உங்கள் தினசரி ஸ்நானத்திற்கு இன்றியமையாத ஸோப்பு ஹமாம்தான். அதன் பரிமளம்கவரும் அபரிமிதமான நுரை உங்கள் தேகத்தை மாசற்று குளிர்ச்சியுடன் நறுமணம் வீச விளங்கச் செய்கிறது.



முற்றிலும் சுதேசி
மிருகக் கொழுப்பற்றது

# HAMĀM

**ஹமாம்**

உங்கள் ஸ்நானத்திற்குகந்த
பெரிய ஸோப்பு.

டாம்கோ விற்பனை இலாகா: 19-A, வாணியர் தெரு, மதராஸ்.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS ... STREET, TRIPLICANE, MADRAS